MALAE THEEPORI

# மாலெ தீப்பொறி

2022 ஏப்ரல் 16-30 தொகுதி 20 இதழ் 18 விலை ரூ.10 ஆண்டு சந்தா ரூ.150

## ராம நவமியை, இஸ்லாம் மீதான வன்முறைக்குப் பயன்படுத்துவது தடுக்கப்பட வேண்டும்!





பகத்சிங், அம்பேத்கார், பெரியார் போன்றோர்களால் நமக்குள் பற்ற வைக்கப்பட்ட சுதந்திர, முற்போக்கு சமத்துவ இந்தியா எனும் மாபெரும் கனவை நினைவுறுத்தி, விடுதலை, நீதி, ஜனநாயகத்திற்கான யுத்தத்தைத் தீவிரப்படுத்தி பாசிசப் பிடியில் இருந்து இந்தியாவை விடுவிக்கும் பொறுப்பு இப்போது நம் கையில் உள்ளது.

\- இகக(மாலெ)விடுதலை

# ராம் நவமியை இஸ்லாம் விரோத வன்முறைக்குப் சாக்காகப் பயன்படுத்துவது பற்றி...

*ராம் நவமியை சாக்காகக் கொண்டு ஏப்ரல் 10 அன்று, சங் பரிவார் அமைப்புகள், இஸ்லாம் விரோதம் கொண்டு கல்லெறிதல், மதவாத வன்முறை மற்றும் அச்சுறுத்தல் சம்பவங்களில் ஈடுபட்டது குறித்து நாங்கள் ஆழ்ந்த கவலை கொண்டுள்ளோம்.*

*இது போன்ற சம்பவங்கள் குஜராத்தின் ஹிம்மத் நகர் மற்றும் காம்பட், மத்திய பிரதேசத்தின் கார்பன், ஜார்க்கண்ட் லோகர் டாஹா மற்றும் பெர்னெய், மேற்கு வங்கத்தின் ஷிப்பூர் ஆகிய இடங்களிலும் டெல்லி ஜவகர்லால் நேரு பல்கலைக் கழகத்திலும் நடைபெற்றுள்ளன.*

*ராம் நவமிக்கு முன்னிட்டு, பாஜக தலைவர்களும் அரசு நிர்வாகத்திலுள்ள மதவாத சக்திகளும் இறைச்சி விற்பது உண்பதும் தடைசெய்யப்பட்டிருப்பதாக பொது அறிவிப்பு செய்திருந்தனர். இதைத் தொடர்ந்து, இஸ்லாமியர்களுக்கு சொந்தமான, அவர்கள் நடத்துகிற இறைச்சிக் கடைகளை சங் கும்பல் தாக்குவது நடந்தேறின. ஜெஎன்யூ விடுதியில் ஏபிவியினர் வன்முறையில் ஈடுபட்டு அங்குள்ள ஊழியர்கள் அசைவ உணவு சமைப்பதை, பரிமாறுவதை தடுக்க முற்பட்டனர். உணவுக்கூடத்தில் சாப்பிட்டுக் கொண்டிருந்த மாணவர்களை இரும்புக்கம்பிகளாலும் பாறாங்கற்களாலும் தாக்கி பலரைக் காயப்படுத்தினர்.*

*ராம நவமி ஊர்வலங்கள், இஸ்லாமியர்களை இனப்படுகொலை செய்ய அழைப்புவிடுக்கும் பாடல்களை ஒலிபரப்பும் தருணங்களாக மாறியுள்ளன; மசூதிகளுக்கு வெளியே நின்று கொண்டு இந்து மேலாதிக்க முழக்கங்கள் எழுப்புவதும் இகழ்ச்சியாக பேசுவதும் மசூதிகளை தாக்கி நாசப்படுத்துவதும் மசூதிகளுக்கும் இஸ்லாமியரின் வீடுகளுக்கும் கடைகளுக்கும் தீ வைத்துக் கொளுத்துவதையும் செய்துள்ளனர். குஜராத்திலும் மத்தியபிரதேசத்திலும் ஜெஎன்யூவிலும் அரசு எந்திரங்கள் வெளிப்படையாக ஆதரவளித்ததைக் காண முடிந்தது. ராம் நவமிக்கு அடுத்தநாள், கார்கோனில் நாசக்கார கலவரக் கும்பல்களிடமிருந்து தப்பித்த இஸ்லாமியர் வீடுகளை மாவட்ட நிர்வாகமே இடித்துத் தள்ளியுள்ளது. இந்த பாசிசச் செயலைத் தொடர்ந்து, மத்திய பிரதேச அரசின் உள்துறை அமைச்சர் நரோத்தம் மிஷ்ரா, 'எந்த வீடுகளில் இருந்து கற்கள் வீசப்பட்டனவோ அந்த வீடுகளெல்லாம் இடித்து குப்பை மேடாக்கப்படும்' என்று அறிக்கை ஒன்றை வெளியிட்டிருக்கிறார்.*

*துரதிஷ்டவசமாக பெரும்பாலான ஊடகங்கள், இஸ்லாமியர் மீதான இந்த பாசிசத் தாக்குதல்களை, இந்து-இஸ்லாமியர்களுக்கிடையிலான "மோதல்கள்" என்றோ அல்லது ஜென்யூ வில் உள்ளது போல வலது-இடது மாணவர் அமைப்புகளுக்கிடையிலான மோதல் என்றோதான் சித்தரித்துள்ளன. அதுமட்டுமின்றி, திட்டமிட்ட வகையில், வன்முறையால் பாதிக்கப்பட்டவர்கள் வன்முறையை நிகழ்த்திய சங் பரிவாரத்தினர்தான் என்று காட்ட முயற்சித்துள்ளன.*

*சங்கிகள், இஸ்லாமிய பூச்சாண்டி பரப்புரை மற்றும் வன்முறைக்கான மேடைகளாக இந்து திருவிழாக்களை மாற்றுவதன் மூலம் ஒட்டு மொத்த இந்து சமுதாயத்திற்கும் நஞ்சூட்டப் பார்க்கின்றனர். இத்தகைய பரப்புரை, வன்முறைக்கெதிராக சமூகத்தில் உள்ள ஜனநாயகப் பிரிவினர் நாடு முழுவதும் எதிர்ப்பு இயக்கங்களைக் கட்டமைக்குமாறு கேட்டுக்கொள்கிறோம்.*

**இகக(மாலெ) லிபரேஷன்,**
**அரசியல் தலைமைக்குழு**

2022 ஏப்ரல் 16-30

மாலெ தீப்பொறி

தொகுதி 20 இதழ் 18

இருவார இதழ்

## உள்ளே

ஏப்ரல் 22 உறுதி மொழி 4
பாஜகவின் இந்தித் திணிப்பு 7
சிபிஎம் மாநாட்டுக்கான வாழ்த்துச் செய்தி 9
மே நாள் செய்தி 12
இலங்கையின் பொருளாதார நெருக்கடி 15
சொத்து வரி உயர்வும் சமத்துவ நாளும் 18

**ஆசிரியர்**
**ஜி.ரமேஷ்**

**ஆசிரியர்குழு**
**பாலசுந்தரம்**
**என்.கே.நடராஜன்**
**கே.ஜி.தேசிகன்**

**மேலாளர்**
**சொ.இரணியப்பன்**

**இந்திய கம்யூனிஸ்ட் கட்சி (மார்க்சிஸ்ட் – லெனினிஸ்ட்) தமிழ்நாடு மாநிலக்கமிட்டியின் அரசியல் ஏடு**

1/10, 11ஆவது தெரு,
கருணாநிதி நகர்,
அயனாவரம்,
சென்னை – 600023

**நிர்வாக அலுவலகம்**

**3/254பி, ஜீவா தெரு,**
**வண்டலூர்**
**சென்னை – 600048**

**தொலைபேசி : 94435 07067**
**98403 40741**

malaetheepori@gmail.com
cpimlthamilnadu.blogspot.com

தலையங்கம்

# செய்யப்பட வேண்டியவை உடன் செய்யப்பட வேண்டும்

*ஆவடியில் உள்ள நரிக்குறவர் குடியிருப்பைச் சேர்ந்த மாணவிகள் வீடியோவில் தமிழக முதல்வருடன் பேசியபோது, முதல்வர் தங்கள் வீட்டிற்கு வர வேண்டும் என்று கேட்டுக் கொண்ட அழைப்பை ஏற்று முதல்வர் ஸ்டாலின் அவர்கள் வீடு தேடிச் சென்று, அவர்கள் கொடுத்த கோழிக்கறி உணவை உண்டு, அங்கிருந்த குழந்தைகளுக்கு ஊட்டிவிட்டு அம் மக்களோடு கலந்துரையாடியுள்ளார். அப்போது உங்களைப்போன்ற பழங்குடி மக்களுக்கு அரசு செய்ய வேண்டியவற்றை வீடு தேடிக் கொண்டு வந்து சேர்ப்போம். நீங்கள் எங்களைத் தேடி வரவேண்டாம், நாங்கள் உங்களைத் தேடி வந்து உதவிகளைச் செய்யும் ஒரு அரசாக, எங்கள் அரசு என்று கூட சொல்லமாட்டேன், இது நம்முடைய அரசு ஏனென்றால் இதில் நீங்கள் இருக்கிறீர்கள், நமது அரசு என்றால் இது உங்களுடைய அரசு விளிம்பு நிலை மக்களுக்கான அரசு என்றும் கூறியிருக்கிறார். அம் மக்களுடன் கலந்துரையாடிய போது, மாமல்லபுரம் அருகே அன்னதானத்தின் போது பெருமாள் கோயிலில் நரிக்குறவர் இனப் பெண்ணிற்கு உணவு மறுக்கப்பட்டபோது, உடனடியாக அறநிலையத் துறை அமைச்சரிடம் பேசி அப் பெண்ணுடன் அமர்ந்து அன்னதானம் உண்ண உத்தரவிட்டதையும் அம் மக்களுக்கு என்னென்ன நலத்திட்ட உதவிகள் வழங்கப்பட்டுள்ளது என்பது பற்றியும் புள்ளிவிவரத்துடன் அவர்களிடம் குறிப்பிட்டார் முதல்வர் ஸ்டாலின். குறிப்பாக நரிக்குறவர் குடியிருப்புகளுக்கு கழிவறை வசதி, குடிநீர் வசதி, மின்சார வசதி, ரேசன் கார்டு போன்றவை இந்த அரசு வந்தபின்னர்தான் செய்யப்பட்டுள்ளது என்று குறிப்பிட்டுள்ளார். நல்ல நடவடிக்கைதான். ஆனால், விளிம்பு நிலை மக்களைப் பாதிக்கும் வகையில் இதே அரசு சொத்து வரியை உயர்த்தியிருக்கிறது. கடந்த அதிமுக ஆட்சியின் போது சொத்து வரி உயர்த்தப்பட்ட போது அதைத் திரும்பப் பெற வேண்டும் என்று சொன்னார் அன்றைய எதிர்க்கட்சித் தலைவர் ஸ்டாலின். இன்று அவர் முதல்வர், இப்போது உயர்த்திய சொத்துவரியைக் குறைக்கக்கூட முடியாது என்கிறார். பழங்குடி மக்களுக்கு விளிம்பு நிலை மக்களுக்கு பல சலுகைகளைச் செய்வதாகச் சொல்லும் ஸ்டாலின் அவர்கள் ஆதி திராவிட நலத் துறையில் உள்ள நிதிகள் பயன்படுத்தப்படாமல் வீணாகிக் கொண்டிருக்கின்றன. ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறையில் 2016–17 காலக்கட்டத்தில் இருந்து 2020–21 காலக்கட்டம் வரையில் ரூ.15,192.3 கோடி ஒதுக்கப்பட்டு அதில் ரூ.926.6 கோடி பயன்படுத்தப்படாமல் உள்ளது என்று ஒரு புள்ளி விவரம் கூறுகிறது. ஆதி திராவிட நலத் துறை மற்றும் பழங்குடியின மக்களுக்கான கல்வி உதவித் தொகை கூட அவர்களுக்கு வழங்கப்படாமல் உள்ளது. இதனால் பள்ளிக் கட்டணம் கட்டப்படாமல் மாணவர்கள் பரீட்சைக்கான நுழைவுச் சீட்டைக் கூட பெற முடியாமல் உள்ளார்கள் என்கிறது ஒரு செய்தி. ஆதி திராவிடர், பழங்குடியின மாணவர்கள் சான்றிதழ் அளித்தால் என்ஜினியரிங் கல்லூரிகளில் கலைக் கல்லூரிகளில் 100% கட்டணச் சலுகை உண்டு. பெரிய, பிரபலமான கல்லூரிகள் அம் மாணவர்களைச் சேர்ப்பதே கிடையாது. காரணம் அரசிடமிருந்து கல்வி உதவித் தொகை குறித்த காலத்தில் வந்து சேராது என்பதுதான். ஆதி திராவிட நலத் துறையில் உள்ள பணியாளர்களுக்கு சம்பளப் பாக்கி உள்ளது. ஆதி திராவிட மற்றும் பழங்குடியினர் துறையின் கட்டப்பட்ட பல கட்டிடங்கள் குறிப்பாக, திருமண மண்டபங்கள், சமுதாய நலக்கூடங்கள் எல்லாம் எதற்கும் பயன்படுத்தப்படாமல் கேட்பாரற்று பாழடைந்து கிடக்கின்றன. தமிழ்நாடு முழுவதும் உள்ள ஆதி திராவிட, பழங்குடியின மக்களுக்கு, விளிம்பு நிலையில் உள்ள மக்களுக்கு அரசின் அலட்சியத்தால் செய்யப்படாமல் உள்ள நலத்திட்டங்களை உடனடியாக கொண்டு சேர்க்க வேண்டும். அப்போது மட்டுமே அது நம்முடைய அரசாக இருக்கும். அல்லது வெறும் வாய் வார்த்தையாகத்தான் இருக்கும்.* ❑

# 2022 ஏப்ரல் 22 உறுதிமொழி!

*ஏப்ரல் 22, 2022 இகக(மாலெ) துவக்கப் பட்டதன் 53வது ஆண்டைக் குறிக்கிறது. இந்த வரலாற்று சிறப்புமிக்க தருணத்தில், கட்சி உறுப்பினர்கள் அனைவருக்கும் கட்சியின் ஆதரவாளர்களுக்கும் மத்தியக் கமிட்டி, புரட்சிகர வாழ்த்துகளை தெரிவித்துக் கொள்கிறது, அனைத்துவித இடர்ப்பாடான நிலைமைகளுக்கு எதிராகவும் ஜனநாயகத்திற்கான, மக்களது உரிமைகளுக்கான யுத்தத்தை முன்னெடுத்துச் செல்லும் கட்சியின் உறுதிப்பாட்டை புதுப்பித் துக் கொள்கிறது. ஏப்ரல் 22, தோழர் லெனினது 152வது பிறந்த ஆண்டுமாகும். தோழர் லெனினுக் கும் கட்சியை துவக்கிய தலைவர்கள் அனை வருக்கும் நம்மைவிட்டுப் பிரிந்த தலைவர்களுக் கும் தியாகிகளுக்கும் நாம் நமது மரியாதைக்குரிய அஞ்சலியைத் தெரிவித்துக்கொள்கிறோம். இந்த ஆண்டின் பிற்பகுதியில் ஜூலை 28 அன்று தோழர் சாருமஜூம்தார் தியாகியானதன் 50வது ஆண்டையும் டிசம்பர் 10 அன்று தோழர்கள் ஜகதீஷ்மாஸ்டர், ராமாயன் ராம் தியாகிகளானதன் 50வது ஆண்டையும் கடைப்பிடிக்க இருக்கி றோம்.*

*கோவிட் 19 பெருந்தொற்றாலும் அதை எதிர்த்துப்போராடுவது என்ற பேரால் திணிக்கப் பட்ட கொடூரமான பொதுமுடக்கத்தாலும் கடந்த இரண்டு ஆண்டுகளை இருள் கவ்வியிருந்தது. ஆனபோதும் இந்திய மக்களும் நமது கட்சியும் நமது அடிப்படை கோரிக்கைகள், உரிமைகள் மீது வெற்றிகரமான பல போராட்டங்களை நடத்தியிருக்கிறோம். வரலாற்று சிறப்புமிக்க விவசாயிகள் இயக்கம், பெரும்தொழில் குழும ஆதரவு விவசாயச் சட்டங்களை திரும்பப் பெறு மாறு மோடி அரசாங்கத்தை கட்டாயப்படுத்தி யிருக்கிறது. இப்போது, அனைத்துவகை பயிர்களுக்கும் வார சாகுபடியாளர்கள் உள்ளிட்ட அனைத்து பிரிவினருக்கும் நியாயமான குறைந்த பட்ச ஆதார விலையைப் பெறுவது, உழைக்கும் மக்களது கடன்களை தள்ளுபடி செய்வது, வேலை பெறுவது, அனைத்து தொழிலாளருக்கும் வேலை தேடுவோருக்கும் வாழ்க்கை ஊதியம் பெறுவது, விரல் விட்டு எண்ணக்கூடிய பெருங் குழும நிதிறுவனங்களுக்கு நாட்டின் பொதுச் சொத்துகளை விற்பதையும் கைமாற்றி விடுவதை யும் தடுத்து நிறுத்துவது ஆகியவற்றுக்கான போராட்டங்கள் நடைபெற்று வருகின்றன.*

*ஒவ்வொரு தேர்தல் வெற்றியும் பாஜக வையும் சங் பரிவாரத்தையும் அவர்களது பாசிச தாக்குதலை தீவிரப்படுத்துவதற்கு துணிச்சல் பெறவைக்கின்றன. 2019 வெற்றிக்குப்பிறகு, மோடி வெகு சீக்கிரமே அரசமைப்பு சட்டப்பிரிவு 370ஐ நீக்கிவிட்டு ஜம்மு, காஷ்மீரை இரண்டு யூனியன் பிரதேசங்களாக குறைத்துவிட்டார், அதை அடுத்து குடியுரிமை சட்டத்தையும் திருத்தினார். இப்போது, உத்தரப்பிரதேசம், உத்தர்காண்ட், கோவா, மணிப்பூர் மாநிலங்களில் பாஜகவின் வெற்றிக்குப் பிறகு, பாஜக அல்லாத அரசாங்கங்களை கவிழ்க்கவும் பீகார் போன்ற மாநிலங்களில், வெகு காலமாக தனது முகமாக அல்லது முகக் கவசமாக நிதிஷ்குமாரை பயன்படுத்தி வந்த அங்கு, தங்கள் கட்டுப் பாட்டை இறுக்கிக் கொள்ளவும் முயன்று வருகிறது. வெறுப்பு, அச்சத்தை ஏற்படுத்தி, மக்களை மதவாத அடிப்படையில் அணிதிரளச் செய்யவும் வன்முறையை தூண்டிவிட்டுக் கொண்டிருக்கும் அதேவேளை, எரிபொருள், உணவு பிற அத்தியாவசியப் பொருள்கள், சேவைகளின் விலைகளை பெருமளவு உயர்த்தி மக்கள் மீது பொருளாதாரப் போரையும் தீவிரப் படுத்தியிருக்கிறார்கள்.*

*நெருக்கடிகள் தீவிரமடைந்தபோதிலும் தப்பித்துக் கொள்ளமுடியாத இந்தியாவின் தலையெழுத்து என பாஜகவின் ஆட்சியையும் ஆர்எஸ்எஸ் கருத்தியலையும் மக்களை ஏற்றுக் கொள்ளச் செய்வதற்காக மக்களை மனச் சோர் வடையச் செய்தும் அச்சுறுத்தியும் வருகின்றனர். ஆனால், இந்திய சுதந்திரத்தின் 75வது ஆண்டு, நமது சுதந்திர இயக்கத்தின் சக்திமிக்க முற்போக்கு மரபையும் பகத்சிங், அம்பேத்கர், பெரியார் போன்றோர்களாலும் இவர்களுக்கு முந்தைய காலனிய எதிர்ப்பு, சாதிய எதிர்ப்பு போராளி களாலும் நமக்குள் பற்ற வைக்கப்பட்ட சுதந்திர, முற்போக்கு, சமத்துவ இந்தியா எனும் மாபெரும் கனவையும் நினைவுறுத்துகின்றன. இந்த மரபை முன்னெடுத்துச் செல்வதும் விடுதலை, நீதி, ஜனநாயகத்துக்கான யுத்தத்தை தீவிரப்படுத்தி பாசிசப் பிடியிலிருந்து இந்தியாவை விடுவிக்கும் பொறுப்பு இப்போது நம் கையில் உள்ளது. இந்த நோக்கத்திற்காக நாம் அனைத்து, இடது, முற்போக்கு, போராடும் சக்திகளின் வலுமிக்க ஒற்றுமையை ஒன்றிணைத்திட வேண்டும்,*

*மக்களது நிகழ்ச்சிநிரலையும் போராட்டங் களையும் தேர்தல் அரங்கிலும் சக்திமிக்க அறுதியிடலாவதை நோக்கி வழிநடத்திட வேண்டும்.*

*இந்த வரலாற்றுக் கடமையை முன்னெ டுத்துச்செல்ல நாம் கட்சியை விரிவுபடுத்தியாக வேண்டும், வலுப்படுத்திட வேண்டும். அடுத்த ஆண்டின் துவக்கத்தில் கட்சியின் 11வது காங்கிரசை பாட்னாவில் நடத்த உள்ளோம், அனைத்துவகையிலும் முக்கியத்துவம் வாய்ந்த மக்களவைத் தேர்தலை 2024 துவக்கத்தில் எதிர் கொள்ளவிருக்கிறோம். இந்த கடமைகளுக்காக கட்சி முழுவதும் உள்ளார்வத்துடன் தயாரிப்பு களில் இறங்கியாக வேண்டும். பெரிய அளவில் பரிட்சார்த்த உறுப்பினர்களை சேர்ப்பதன்மூலம் கட்சியை புதிய பகுதிகளுக்கும் மக்களின் புதிய பிரிவினர் மத்தியிலும் விரிவுபடுத்திட வேண்டும்; கட்சிக் கமிட்டிகள், கிளைகளின் முன்னேறிய செயல்பாட்டின் மூலமும் கட்சிக் கட்டுப்பாட்டை கறாராக கடைப்பிடிப்பதன் மூலமும் கட்சி ஒற்றுமையையும் அதன் போராடும் சக்தியையும் வலுப்படுத்திட வேண்டும்; கட்சி ஏடுகள், மார்க்சிய இலக்கியங்களை அக்கறையோடு படிப்பதன்மூலம் கட்சியின் கருத்தியல்அரசியல் மட்டத்தை உயர்த்தியாக வேண்டும். வெகு மக்களை தொடர்பு கொள்வது, வெகுமக்கள் போராட்டங்கள் நடத்துவதென்ற அடிப்படையில் நம்முடைய அன்றாட அடிப்படையிலான பொறுப்புகளை நிறைவேற்றிக் கொண்டே மேற்கூறிய கடமைகளை நிறைவேற்றும் திசையில் முன் சென்றாக வேண்டும்.*

நமது அன்பிற்குரிய தலைவர்களுக்கும் தியாகிகளுக்கும் செவ்வணக்கம்!

இந்தியா முழுவதும் இகக(மாலெ)வை, துடிப்புமிக்க, கடப்பாடுகொண்ட சக்திமிக்க பாசிச எதிர்ப்பு போராட்ட சக்தியாக நிறுவிடுவோம்!!

**மத்தியக் கமிட்டி,**
**இகக(மாலெ) லிபரேஷன்**

# எரி பொருள் விலை உயர்வுக்கு மோடி அரசாங்கத்தை பொறுப்பாக்குவோம்!

*சமீபத்திய 5 மாநில தேர்தல்களை அடியொற்றி எரிபொருட்களின் விலை அடுத்தடுத்து இதுவரை 12 முறை உயர்த்தப் பட்டிருக்கிறது. இது ஒரு, இழிவான, அரசியல் சித்து விளையாட்டாகும்: அதாவது ஒவ்வொரு பெரிய தேர்தல் சுற்றுக்கும் முந்தைய மாதங்களில் விலையை உயர்த்தாமல் வைத்திருந்து தேர்தல் முடிந்த கையோடு கிடுகிடுவென விலையை உயர்த்தி விடுவது எனும்சூழ்ச்சிகரமானஅரசியல் சித்துவிளையாட்டாகும். அண்மையில் உயர்த்தப் பட்ட விலையினால் பெட்ரோலின் விலை லிட்டர் ஒன்றுக்கு சராசரியாக ரூ.107க்கு வந்துவிட்டது. டீசலின் விலையும் சராசரியாக லிட்டருக்கு ரூ.99 ஆக உயர்ந்துவிட்டது. சமையல் எரிவாயுவும் உருளை ஒன்றுக்கு ரூ.926 ஆகிவிட்டது. சில்லரை பணவீக்க விகிதத்தை அளக்கும் நுகர்வோர் விலைக் குறியீட்டு எண் பிப்ரவரியிலேயே 6.07% ஆக இருந்துள்ளது. பெட்ரோலியம், இயற்கைவாயு துறை ஒன்றிய அமைச்சர் ஹர்தீப்சிங்புரி, உலகிலுள்ள மற்ற நாடுகளின் விலை உயர்வைவிட இந்தியாவி லுள்ள விலை உயர்வு ஒன்றும் அதிகமில்லை என்று கூறி விலை உயர்வை நியாயப்படுத்த முற்படுகிறார். இவ்வாறு மோசமான சாக்குப் போக்கு கூறுவதே ஒரு ஏமாற்று வேலையாகும். இந்தியாவில் பெட்ரோலிய பொருட்களின் விலை, நமக்குப் பக்கத்திலுள்ள அனைத்து நாடுகளை விடவும் மிக அதிகமாகும். இன்னும் சொல்லப்போனால், அதிக தனி நபர் வருமானமுள்ள அமெரிக்கா போன்ற நாடுகளை விடவும் (நம் நாட்டில் விலை) அதிகமாகும். விலை உயர்வுக்கு ரெட்டிப்புக் காரணம் உள்ளது. முதலாவது காரணம், 'விலைக் கட்டுப்பாடு நீக்க' நடவடிக்கை. இதனால், பெட்ரோலிய பொருட்களின் விநியோகிப்பாளர்கள் தங்களுக் கான சொந்த விலையை நிர்ணயம் செய்து கொள்ள இது வழி செய்கிறது. இதற்கு பாஜகவுக்கு நன்றி தெரிவிக்கும் விதமாக பெரியளவில் தேர்தல் நடக்கும் காலங்களில் விநியோகிப்பாளர்கள் குறிப்பிடத்தக்க அளவில் விலை உயர்வை உயர்த்தாமல் நிறுத்தி வைக்கின்றனர். இரண்டாவது காரணம்,*

பெட்ரோலியம், டீசல் மீது குறிப்பிடத்தக்க அளவுக்கு கலால் வரி விதிப்பு. கார்ப்பரேட்டு களுக்கும் இந்தியாவின் பணக்காரபிரிவினருக்கும் கணிசமான வரி வெட்டு அளிப்பதன் மூலம் பாஜக அரசாங்கத்தின் வரி அடித்தளத்தை அரிக்கச் செய்துவிட்டது; எனவே, அளவுக்கு அதிகமாக எரிபொருள் மீதான கலால் வரி மூலம் வரும் வருவாயை (அரசாங்கம்)நம்பியிருக்கிறது. இந்த பின்புலத்தில், எரிபொருள் விலைக்கட்டுப்பாட்டை நீக்குவதன் பொருள், சாமான்ய குடிமக்கள் எரிபொருள் மீதான செலவுகள் மீதான கட்டுப்பாட்டை இழந்து போகிறார்கள் என்பதாகும். எப்படியான போதும் விலைகள், பின்கதவு (ரகசிய) பேரங்கள் மூலம் நிர்வகிக்கப்படுகிறது. இப்படியான நடவடிக்கை, "தேர்தல் சுயேச்சாதிகாரம்" என்று அழைக்கப்படுவதற்கு சேவை செய்கிறது. சுதந்திரச் சந்தை என்பது பாஜகவின் தேர்தல் அவசரங்களுக்கு அடிமையாகி விடுகிறது. இந்திய அரசாங்கம், ருஷ்ய அரசாங்கத்திடமிருந்து பேரல் ஒன்றுக்கு 35 டாலர் விலையில் எரிபொருள் வாங்க ஒப்பந்தம் போட்டிருப்பது கவனத்தில் கொள்ள வேண்டிய மிக முக்கியமான விஷயமாகும். இது (இந்த ஒப்பந்தம்), இப்போதுள்ள சந்தை விலையைவிட 65% குறைவானதாகும். உக்ரைன் மீது ருஷ்யா போர்க்குற்றங்கள் புரிந்துகொண்டிருக்கும் சமயத்தில், ருஷ்யாவிடம் இப்படிப்பட்ட ஒரு ஒப்பந்தத்தை போட்டிருப்பது எந்தவகையில் அறநெறியானது என்பது ஒருபுறமிருக்க, இந்த விலைக் குறைப்பு சாமான்ய இந்தியர்களுக்கு சென்றுசேருமா? அப்படி சென்று சேராதென்றால், எண்ணெய் கம்பெனிகள் மிகப்பெருமளவில் லாபம் குவித்துக் கொள்வதற்கென்றே இந்திய அரசாங்கம், நமது சொந்த ராஜதந்திர, அரசியல் மூலதனத்தை வீணடித்திருப்பது மட்டுமே நடந்திருக்கிறதென்பதை புரிந்து கொள்ளலாம். தற்போது தாறுமாறாக எகிறிக்கொண்டிருக்கும் எரிபொருள் பணவீக்கம், அளிப்புச் சங்கிலி யிலுள்ள பொருள்களின் விலையை உயர்த்தி விடும், அதன்காரணமாக (மக்களது) வாழ்க்கைச் செலவையும் அதிகரிக்கச்செய்துவிடும். இது, இரண்டாண்டுகால பெருந்தொற்று, பொது முடக்கத்துக்குப் பிறகு அதிகரித்த வேலை இல்லா திண்டாட்டத்தாலும் வறுமையாலும் அவதிப்பட்டுக் கொண்டிருக்கும் மக்களது வாங்கும் சக்தியை மேலும் கட்டுப்படுத்திவிடும். இந்த சமயத்தில் அரசாங்கம் தலையிட்டு, விலைக் கட்டுப்பாடு நீக்க பேரழிவுக் கொள்கையை திரும்பப் பெற்று எரிபொருள் விலையை நேரடியாக கண்காணிப்பது மிக அவசியமாகும். வருவாய்க்காக அரசாங்கம், பெட்ரோல், டீசல் மீதான கலால்வரியை நம்பியிருப்பது எரிபொருள் விலை உயர்வுக்கு வழிவகுக்கிறது. இதன் பொருள், இந்தியாவின் ஏழைகளின் சட்டைப் பைகளிலிருந்து வருவாய் எடுத்துக் கொள்ளப் படுகிறது என்பதுதான். இது முடிவுக்கு வந்தாக வேண்டும். பணக்காரர் களிடமிருந்து முழுவது மாக அளவுக்கு வரி வசூல்செய்து அரசாங்கத்தின் வருவாய் அடித்தளத்தை விரிவுபடுத்திக்கொள்ள வேண்டும். அதிகரித்து வரும் வேலை இல்லாத் திண்டாட்ட விகிதமும் வேலைப் பாதுகாப் பின்மையும் சேர்ந்து உண்மை ஊதியத்தை சுருங்கச் செய்து விடுகிறது, எரிபொருள் விலை உயர்வோ மொத்த நாட்டையும் பொருளாதார மந்தத்தில் தள்ளிவிடுவதாக அச்சுறுத்துகிறது. இகக(மாலெ) நடத்தும் ஏப்ரல் 713 பரப்புரை இயக்கம், அரசாங்கம் விலைக்கட்டுப்பாடுநீக்க கேலிக் கூத்துக்கு முற்றுப்புள்ளி வைக்க வேண்டு மென்றும் எரிபொருள்மீதான செங்குத்தான கலால் வரியை உடனடியாக குறைப்பது உள்ளிட்ட எரிபொருள் விலையின் தாறுமாறான உயர்வைக் கட்டுப்படுத்துவது, பணக்காரர்களிடமிருந்து வரிகளை முழுவதுமாக வசூலிப்பது உள்ளிட்ட செயல்மிக்க நடவடிக்கைகளை எடுத்தாக வேண்டுமென்றும் கோருகிறது.

**எம்எல் அப்டேட் (5–11 ஏப்ரல், 2022)**
**தலையங்கம்**

**தமிழாக்கம் – பாசு**


மாலெ தீப்பொறி

சந்தாதாரர் ஆகிடுவீர்!

**மாதம்**
**இருமுறை**

**தனி இதழ் ரூ.10**
**ஆண்டுச் சந்தா ரூ.150**

# பாஜகவின் இந்தித் திணிப்பு நிகழ்ச்சி நிரல்

உள்துறை அமைச்சர் அமித் ஷா, இந்தி பேசாத மாநிலங்கள் மீது இந்தியைத் திணிப்பதற்காக மீண்டும் ஒருமுறை வேண்டு மென்றே வாதிட்டிருக்கிறார். அதிகாரபூர்வ மொழி பற்றிய நாடாளுமன்றக் கமிட்டியின் தலைவர் என்ற முறையில் அந்தக் கமிட்டி உறுப்பினர் களிடையே பேசும்போது, நாட்டின் 'ஒற்றுமைக்கு' இந்தி அவசியம் என்றும் அதனால் இந்தி பேசாத மாநிலங்களில் இணைப்பு மொழியாக இருக்கும் ஆங்கிலத்துக்கு பதிலாக இந்தியை இணைப்பு மொழியாக ஆக்க வேண்டுமென்று பேசியுள்ளார். ஒன்றிய அமைச்சரவையின் 70 விழுக்காடு தகவல் பரிமாற்றங்கள் தற்போது இந்தியிலேயே நடைபெறுவதாகவும் அவர் கூறியுள்ளார். சமஸ்கிருதமயமாக்கப்பட்ட இந்தியைத் திணிக்கும் நிகழ்ச்சிநிரல், 2014 முதலாய் மோடி ஆட்சி முன்தள்ளிவரும் இந்தி-இந்து-இந்தியா எனும் ஆர்எஸ்எஸ்-பாஜகவின் பெரிய மனுதர்ம நிகழ்ச்சி நிரலின் ஒரு பகுதியாகும். இந்தியா முழுவதுமுள்ள எதிர்கட்சிகளும் எதிர்கட்சிகள் ஆளும் மாநிலங்களும் திட்டவட்டமான விதத்தில் இந்தித் திணிப்பை நிராகரித்து வருகிற போதிலும் ஆர்எஸ்எஸ்-பாஜக இவ்வாறு செய்து வருகிறது.

மோடி ஆட்சி, ஒன்றிய அமைச்சகங்கள், துறைகள், கார்ப்பரேஷன்கள், வங்கிகள் இவற்றின் சமூக ஊடக கணக்குகளை நடத்துவதில் இந்திக்கு முன்னுரிமையளிக்க வேண்டுமென கேட்டு வருகிறது. இந்தியில் பேசுமாறு பாஜக தலைவர்களை கேட்டு வருகிறது; அய்நா சபையில் இந்திக்கு அதிகாரபூர்வ தகுதி பெற முயன்றும் வருகிறது; இவ்வாறாக, இந்திதான் இந்தியாவின் தேசியமொழி என்று பொருள் படுத்திவருகிறது; தென் மாநிலங்களில் உள்ள மைல் கற்களில் உள்ள ஆங்கிலத்தின் இடத்தில் இந்தியை கொண்டுவர முயற்சிக்கிறது; இந்தியா முழுவதுமுள்ள பள்ளிகளில் தற்போதுள்ள இருமொழிக் கொள்கைக்குப் பதிலாக மும்மொழிக் கொள்கையைக் கொண்டுவரும் முன்மொழிதலைக் கொண்டுவர முயன்று வருகிறது. இந்த முயற்சிகளில் மோடி ஆட்சி மீண்டும் மீண்டும் பின்வாங்க நேரிட்டபோதும் ஒட்டுமொத்த நாட்டின் மீதும் இந்தியைத் திணிக்கும் முயற்சிகளை எடுத்து வருகிறது. ஏனெனில், இது ஆர்எஸ்எஸின் கருவான நிகழ்ச்சி இந்திய அரசமைப்புச் சட்டத்தின் எட்டாவது அட்டவணை, 22 மொழிகளை தேசிய மொழி களாக அங்கீகரித்திருக்கிறது என்பது சுட்டிக் காட்டப் படவேண்டும்; அதே வேளை இந்தியும் ஆங்கிலமும் அதிகாரபூர்வ மொழி என்ற சமதகுதி கொண்டவை என்பதும் அங்கீகரிக்கப்பட்டிருக் கிறது. மேலும் (சட்டவழியில் அல்லாது) நடைமுறையில் அதிகாரபூர்வ தகவல் தொடர்புக்கு இந்திமட்டுமே எனதாக்க முயற்சிப்பது அரசமைப்பு சட்ட உணர்வுக்கு எதிரானது.

அலுவல் மொழியாக பயன்படுத்தப்படும் சமஸ்கிருஸ்தமயமாக்கப்பட்ட இந்தி வடிவம், இந்தி பேசும் பகுதிகள் என்று சொல்லப்படும் பகுதிகளில் பொதுவாக பேசப்படும் தாய்மொழியைப் போலல்லாமல், மாறாக அது ஒரு வகையான இணைப்பு மொழியாகவே இருந்து வருகிறது. தென்னிந்திய மாநிலங்கள், அசாம், மேற்கு வங்கம், வடகிழக்கு மாநிலங்களில் எப்படி ஆங்கிலம் இணைப்பு மொழியாக பயன்படுத்தப்படுகிறதோ அதுபோல் பயன்படுத்தப்படுகிறது என்பதும் வலியுறுத்தி சொல்லப்படவேண்டிய ஒன்று. நன்கறியப்பட்ட வரலாற்றாசிரியர் அலோக் ராய் கூறியிருப்பது போல, இந்தி பேசும் பகுதிகளில் உள்ள மாணவர்கள் இந்தித் தேர்வில் பெரும் எண்ணிக்கையில் தோல்வியடைவதென்பது அங்குள்ள மாணவர்களின் தாய்மொழியை இந்தி களவாடிவிட்டது என்பதற்கான வலுவான சாட்சியமாகும்; வட இந்திய மாநிலங்களில் கூட இந்தி ஒருவிதமான ஏழைகளின் ஆங்கிலமாகவே அதாவது அதிகாரம், மேல்நோக்கிய நகர்வு ஆகியவற்றின் மொழியாகவே கருதப்படுகிறது என்பது ராய்-ன் வாதமாகும்.

இந்திய குடிமக்கள் ஒவ்வொருவரும் தங்களுக்கு வசதியான மொழியில் அனைத்து ஆவணங்களைப் பெறுவது அவர்களது உரிமையாகும். நடைமுறையில், ஒன்றிய அரசாங்கம் ஆவணங்கள், சட்டங்கள், படிவங்கள் இன்ன பிறவற்றை இந்தியிலும் ஆங்கிலத்திலும் உருவாக்குகிறது. மாநில அரசுகள், அவற்றை மாநிலங்களுக்குரிய குறிப்பான மொழிகளில் மொழிபெயர்ப்பு செய்து கொள்கின்றன. இந்தி பேசாதவர்களின் தொண்டைகளுக்குள் இந்தியை திணிப்பது ஒற்றுமையை உருவாக்காது பாகுபாட்டையே உருவாக்கும்.

இந்தி மேலாதிக்கம், இந்தித் திணிப்புக்கு எதிரான போராட்டம், தமிழ்நாடு, கேரளா, மேற்கு வங்கம், அசாம், மற்ற வடகிழக்கு மாநிலங்களுடையது மட்டுமல்ல, போஜ்புரி, மைதிலி, மகாஹி, அவாதி உள்ளிட்ட வட இந்திய மாநிலங்களிலுள்ள இன்னும் பிற மொழி பேசுகிறவர்களுக்கும் உரியது என்பதும் முக்கிய மானது. இந்த உணர்வின் அடிப்படையில்தான் இந்தி கவிஞர் தூமில், 1965ன் இந்தி எதிர்ப்புப் போராட்டத்தை ஆதரித்து 'உனது தமிழ் வலி/ எனது போஜ்பூர் வலியின் சகோதரன்' என்று எழுதினார்.

சோவியத் ஒன்றியம் முழுவதும் ருஷ்ய மொழியை கட்டாயமாக்குவது என்ற முன் மொழிதல்கள் வந்தபோது, அது பற்றி லெனின் கூறிய கருத்துரைகள் நினைவு கூறத்தக்கது. "குண்டாந்தடி கொண்டு மக்களை சொர்க்கத் திற்குள் விரட்டுவதை நாம் விரும்புவதில்லை; "கலாசாரம்" பற்றி நேர்த்தியான சொற்கள் சொல்லப்பட்டாலும் அது ஒரு பொருட்டல்ல, கட்டாய அதிகாரபூர்வ மொழியென்பது குண்டாந் தடியை பயன்படுத்துகிற பலவந்தமாகும். இந்த "பலவந்தப்படுத்தும் கூறு" தான் ஒட்டுமொத்த நாட்டின்மீதும் சமஸ்கிருதமயமாக்கப்பட்ட இந்தியை திணிக்கும்படி பாஜகவை ஆட்டிப் படைத்து இயக்கும் சக்தியாகும்.

இந்தியத்தன்மை, ஒற்றுமை என்பதை பாஜக ஒருபடித்தன்மையோடு சமப்படுத்துகிறது, மொழியில் மட்டுமல்ல உணவு, நம்பிக்கை, அரசியல், கருத்தியல் விசயங்களில் கூட அது ஒருபடித்தன்மையை கோருகிறது. இந்திய மக்கள், இந்தியாவின் பல்வகைப்பட்ட மொழி, கலாசாரங்கள், உணவு, நம்பிக்கைகள், கருத்தியல்களைப் பாதுகாக்க, பாஜக வின் பாசிச திட்டமான ' ஒரு தேசம், ஒரு மொழி, ஒரு நம்பிக்கை, ஒரு கருத்தியல்' என்பதை எதிர்த்துப் போராடியாக வேண்டும். ஒவ்வொரு குழந்தையும் தனது தாய் மொழியில் பள்ளிக்கல்வி பெறுகிற உரிமையை நாம் அறுதியிட வேண்டும்; வட இந்திய பள்ளிகளில் நடுநிலை, உயர்நிலை வகுப்புகளில் விருப்பத்தேர்வு பாடமாக ஆங்கிலம், தமிழ், கன்னடம், மலையாளம், தெலுகு, உருது மற்ற பிற மொழிகளில் கல்வி வழங்க வேண்டு மென்று கோர வேண்டும்; மேலும் இந்தியை விட தகுதிக் குறைவானதாக ஆக்கப்படாமல் ஆங்கிலமும் இணைப்பு மொழியாக பயன்படுத்து வதை உறுதி செய்ய வேண்டுமென்பதையும் கோர வேண்டும். ❑

**எம்எல் அப்டேட் (12–18 ஏப்ரல், 2022) தலையங்கம்**

**தமிழாக்கம் – பாசு**

# உழைக்கும் மக்களின் உற்ற தோழனாக விளங்கியவர் ஆசிரியர், தோழர். சக்திவேல்

ஆசிரியர், தோழர் சக்திவேல் அவர்கள் வாகன விபத்தொன்றில் அகால மரணம் அடைந்தது கந்தர்வக்கோட்டை சுற்றுவட்டார பகுதிகளில் ஆசிரியப் பெருமக்கள், இடதுசாரி இயக்கத்தினர், உழைக்கும் மக்கள், மாணவர்கள் மத்தியில் பேரதிர்வை ஏற்படுத்தியது.

எளிய விவசாய குடும்பத்தில் வீரடிப்பட்டி கிராமத்தில் பிறந்தவர் தோழர் சக்திவேல். கல்லூரி படிக்கும்போதே விவசாய வேலைகளிலும் ஈடுபட்டு வந்தார். 1999ஆம் ஆண்டு ஆசிரியர் பணியில் சேர்ந்த நாள் முதலாய் அவர், மாணவர் நலன், ஆசிரியர் நலன், மக்கள் நலன் என நின்று புரட்சிகர இடதுசாரி அரசியலை தழுவிக்கொண்டார்.

மாவீரன் பகத்சிங் நினைவு நாளான மார்ச் 23, 2022 அன்று தோழர் சக்திவேலுக்கு நினைவேந்தல் நிகழ்ச்சி இகக(மாலெ) சார்பாக நடைபெற்றது. இகக(மாலெ) மாவட்ட செயலாளர் தோழர் ஆசைத்தம்பி தலைமை தாங்கினார். நிகழ்வில் தோழர் சக்திவேலின் உருவப் படத்தை இகக(மாலெ) அரசியல் தலைமைக்குழு உறுப்பினர் தோழர் சங்கர் திறந்து வைத்து உரையாற்றினார். நிகழ்ச்சியில் இகக(மாலெ) மாநிலச் செயலாளர் தோழர் என்.கே. நடராஜன், மாநிலக் குழு உறுப்பினர் தோழர் வளத்தான், ஏஐசிசிடியு மாநில பொதுச்செயலாளர் தோழர் ஞானதேசிகன், இகக மாவட்டச் செயலாளர் தோழர் மாதவன், இக(மாலெ)மக்கள் விடுதலையின் மாநில பொதுச்செயலாளர் தோழர் கசி.விடுதலைக் குமரன், மேனாள் மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலர் திரு.தமிழரசன், ஓய்வு பெற்ற தலைமை ஆசிரியர்கள் திரு. பழனியாண்டி, திரு. ராசு, அம்பேத்கர் சிலை அமைப்பு கமிட்டியின் தோழர் கோவி.ராஜேந்திரன், இகக(மா) மாவட்டச் செயற்குழு உறுப்பினர் தோழர் ராமையன் ஆகியோர் உரை நிகழ்த்தினர். அகில இந்திய விவசாயிகள் மகாசபையின் மாவட்டத் தலைவர் தோழர் ராசாங்கம், அகில இந்திய முற்போக்கு பெண்கள் கழகத்தின் மாவட்டத் தலைவர் தோழர் ரேவதி, ஏஐசிசிடியு மாவட்டத் தலைவர் தோழர் சிவராஜ், தமிழக ஆசிரியர் கல்வி பண்பாட்டு இயக்கத்தின் ஒருங்கிணைப்பாளர் தோழர் கோவி. ஆறுமுகம் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

# இந்திய கம்யூனிஸ்ட் கட்சி (மார்க்சிஸ்ட்)–ன் 23வது கட்சிக் காங்கிரசுக்கு இகக(மாலெ)விடுதலை–ன் வாழ்த்துச் செய்தி.

**அன்புமிக்க தோழர்களே!**

கேரளாவின் கண்ணூரில் இன்று இகக(மா) வினுடைய 23வது கட்சிக் காங்கிரஸ் துவங்குவது அறிந்து மகிழ்ச்சி அடைகிறேன். இகக (மாலெ) மத்திய கமிட்டி சார்பாக உங்கள் விவாதங்கள் வெற்றியடையவும் மற்றும் உங்கள் அனை வருக்கும் மனமார்ந்த கம்யூனிச வாழ்த்து களை தெரிவித்துக் கொள்கிறேன். இந்த மாநாட்டின் துவக்க அமர்வில் கலந்துகொள்ள அழைப்பு விடுத்த தோழர் சீதாராம் யெச்சூரிக்கு எனது நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன். எதிர்பாராத விதமாக உங்கள் காங்கிரஸ் நடைபெறும் அதே நாளில் ராஞ்சியில் எங்கள் மத்திய கமிட்டி கூட்டம் இருந்ததால் என்னால் உங்கள் நிகழ்ச்சியில் கலந்து கொள்ள இயலவில்லை. உங்கள் காங்கிரசை வாழ்த்தி இந்த எழுத்துபூர்வ செய்தியினை அனுப்புகிறேன்.

நீண்ட நெடிய பெருந்தொற்றின் நிழலில் நீங்கள் 23வது காங்கிரசுக்காக கூடியிருக்கும் போது, ஐரோப்பாவில் இன்னுமொரு யுத்தத்தை நாம் கண்டுகொண்டிருக்கிறோம். சுதந்திர உக்ரைன் என்பது லெனின் செய்த தவறு என்று சொல்லி புதின் அந்தத் தவறை சரி செய்வதாக அச்சுறுத்தி அதன் மீது குண்டு வீசி தாக்குதல் நடத்தி இரண்டாவது பெரிய முன்னாள் சோவியத் குடியரசு என்ற ஒன்றை இல்லாமல் செய்யப் போவதாக அறிவித்திருக்கிறார். இப்போது ஒரு மாதத்திற்கும் மேலாக உக்ரைன் மீதான யுத்தம் தொடர்ந்து கொண்டிருக்கிறது. அது பல்லாயிரக் கணக்கான சாதாரண குடிமக்களைப் பலி கொண்டிருக்கிறது. பல லட்சக்கணக்கானோர் பாதுகாப்புக் கருதி குடிபெயர்ந்திருக்கிறார்கள்.

உக்ரைனில் படிக்கும் வெளிநாட்டு மாணவர்களில் பெரும் எண்ணிக்கையினராக இந்திய மாணவர்கள் உள்ளனர். அப்படி இருந்தும்கூட, மோடி அரசாங்கம் யுத்தத்தை நிறுத்த எவ்வித ராஜதந்திர முயற்சிகளும் எடுக்கவோ, உக்ரைனில் சிக்கித் தவித்த இந்திய மாணவர்களை விரைவாகவும் பாதுகாப்பாகவும் மீட்டு அழைத்து வருவதற்கான ஏற்பாடுகளை உத்தரவாதம் செய்யவோ இல்லை. தீவிரப் படுத்தப்பட்ட இஸ்ரேலிய ஆக்கிரமிப்பு என்ற பின்புலத்தில் எப்படி பாலஸ்தீனிய நலனுக்கு மோடியின் இந்தியா துரோகம் இழைத்ததோ அதேபோல் புதின், உக்ரைனுக்குள் நுழைந்த தையும் செயலூக்கமாக ஆதரித்து வருகிறது.

1917ன் வெற்றிகரமான புரட்சி, ஏகாதிபத்திய சங்கிலியை அதன் பலவீனமான கண்ணியில் துண்டித்து ஜாரின் எதேச்சதிகார பிடியிலிருந்து ரஷ்யாவை மட்டும் விடுவிக்கவில்லை, அது நச்சுத்தன்மை மிக்க மகாரஷ்ய மேலாதிக்க ஆளுமையை முடிவுக்குக் கொண்டு வந்ததன் மூலம் பல்வேறு தேசிய இனங்களின் சிறைச் சாலையாக இருந்த ரஷ்யாவை பல்வேறு தேசிய இனங்களின் சோசலிச கூட்டமைப்பாக மாற்றியது. பூகோள அரசியல் காரணிகள் ஒருபுறமிருக்க, இப்போதைய யுத்தம் என்பது அடிப்படையில் அந்த லெனினிய மரபை அழித்தொழிக்கும் முயற்சியாகும். லெனினின் புரட்சிகர மரபைப் பின்பற்றும் கம்யூனிஸ்டு களாகிய நாம் புதினின் யுத்தத்தையும் ஐரோப்பா வில் ஐக்கிய அமெரிக்கா நேட்டோ விரிவாக்கத் திட்டத்தையும் நிராகரித்துவிட்டு அமைதியும் நீதியும் வேண்டி நமது குரலை உயர்த்த வேண்டும்.

2014லிருந்து நாம் இந்தியாவில் பேரழிவு மிக்க மோடி அரசாங்கத்தை எதிர்கொண்டு வருகிறோம். கடந்து செல்லும் ஒவ்வொரு நாளிலும் அரசாங்கத்தின் பாசிச நிகழ்ச்சி நிரல் மேலும், மேலும் துணிச்சல் பெற்று வருகிறது. அதன் மூர்க்கத்தனம் கூடுதல் தீவிரமடைந்து வருகிறது. வளர்ச்சி என்ற பெயரில் சில பெரும் தொழில் குழுமங்கள் கைகளில் பொதுச் சொத்துக்கள் அப்பட்டமாக வழங்கப்பட்டு வருகின்றன. வலுவான தேசம் என்ற பெயரில் அரசமைப்புச் சட்டத்தில் உறுதி படுத்தப்பட்டுள்ள குடிமக்களின், மாநிலங்களின் உரிமைகள் திட்டமிட்ட விதத்தில் அரித்துப்போக செய்யப் படுகின்றன. மாற்றுக்கருத்து குற்ற மயப்படுத்தப் பட்டு வாயடைக்கச் செய்யப்படுகிறது. கல்வி, ஊடகம் மற்றும் கலாச்சார வெளிகளில் பகுத்தறிவு, முற்போக்கு குரல்களின் குரல்வளை ஓய்வில்லாமல் நெறிக்கப்பட்டு வருகிறது. நெருக்கடியில் வாய்ப்பை தேடுவதற்கான

துணிச்சலை பெருந்தொற்று மோடி அரசாங்கத் திற்கு கொடுத்திருக்கிறது எனும்போது, அவர் களுக்கு இந்திய சுதந்திரத்தின் 75 ஆவது ஆண்டு விழா என்பது, இந்தியாவின் சுதந்திரப் போராட்ட இயக்கத் தலைவர்கள் பலரையும் கடத்திக் கொண்டு செல்லவும், இந்திய சுதந்திரப் போராட்ட இயக்க வரலாற்றையும், சுதந்திரம் என்பதின் அர்த்தத்தையுமே கூட இந்துத்துவா நோக்கு நிலையிலிருந்து திருத்தி எழுதுவதற்கான வாய்ப்பான தருணமாகவும் மேடையாகவும் வந்து வாய்த்திருக்கிறது.

தெளிவாக, இந்தியா என்பதை வரையறுக் கும் அதன் பன்மைத்துவத்தின் மீது இவ்வளவு கொடிய நீடித்த தாக்குதலை நவீன இந்தியா இதுவரை சந்தித்தது இல்லை. அதுபோல் இந்தியாவின் ஒற்றுமை மற்றும் முன்னேற்றத்தை தாங்கிப் பிடிக்கும் அடிப்படை ஜனநாயக கட்டமைப்பு (அது எவ்வளவுதான் குறை வளர்ச்சியுடையதாக இருந்தாலும்) மீதான தாக்குதலையும் இதுபோல் இதுவரை சந்தித்த தில்லை.

பலவீனமான இந்திய ஜனநாயகத்தின் நிறுவன கட்டமைப்புகள் பாசிச தாக்குதலின் முன்னால் சரிந்து விழுகின்றன. இந்திய அரசமைப்புச் சட்டத்தை ஏற்றுக்கொள்கிற சமயம் டாக்டர் அம்பேத்கர் விடுத்த எச்சரிக்கையை இது நினைவுபடுத்துவதாக உள்ளது. அவர் இந்திய அரசமைப்புச் சட்டத்தை உள்ளபடியே ஜனநாயக விரோதமாக இருக்கும் மண்ணின் மேற்பூச்சு அலங்காரம் என்று வர்ணித்தார். 70 ஆண்டுக ளுக்குப் பிறகு அந்த மேல்பரப்பு மண்ணில் வெடிப்பு வருவதை நாம் பார்க்கிறோம்.

நாம் இப்போது தெளிவாக பாசிச மூர்க்கத் தனம் என்ற நிலையை வந்தடைந்திருக்கிறோம். இதுபோன்ற சூழலில், நாம் எல்லா வழிகளிலும் முயன்று ஜனநாயகத்தை காப்பாற்றவும் பாதுகாக்கவும் வேண்டும். நிறுவனங்கள் பலவீன மானதாகவும் பற்றாக்குறையானதாகவும் இருப்பது நிரூபிக்கப்பட்ட பின்னரும் கூட, இந்திய மக்கள் கூடுதலான வகையில் அபாயத்தை உணர்ந்து இதுவரை காணாத அளவு திரும்பத் திரும்ப போராட்டங்களில் வீதிக்கு வருகிறார்கள். சம குடியுரிமைக்கான ஷாஹின்பாக் இயக்கம், ஜனநாயகத்துக்கான, கல்விக்கான, வேலைக்கான மாணவர்இளைஞர் எதிர்ப்பியக் கம், விவசாயத்தை கார்ப்பரேட் நிறுவனங்கள் கைப்பற்றுவதற்கு எதிரான விவசாயிகள் போராட்டம் ஆகியவை எல்லாமே களத்தில் வலுவான மக்கள் எதிர்ப்பை மறு உறுதி செய்யும் சமிக்கைகள் ஆகும். சமீபத்திய தேர்தல்களில் எதிர்க்கட்சிகள் அடைந்திருக்கும் ஏதாவது ஆதாயங்களுக்கும் கூட மக்கள் எதிர்ப்பு இயக்கத்தின் வலுவும் சக்தியுமே முதன்மைக் காரணமாகும். கம்யூனிஸ்டுகளாகிய நாம், இந்தப் போராட்டங்களை தாக்குப்பிடித்து நிற்க வைப்பது, வலுவாக்குவதன் மூலம் மாத்திரம் மட்டுமல்ல, அதேசமயம் கூடுதலாக எதிர்க்கட்சி அரசியலின் உள்ளடக்கத்தையும் வீரியத்தையும் இந்தப் போராட்டங்களின் நிகழ்ச்சி நிரல் மற்றும் உணர்வு கொண்டு செறிவூட்டுதல் மூலமும் முக்கிய பாத்திரம் ஆற்ற வேண்டியுள்ளது.

இந்தியாவில் கம்யூனிச இயக்கத்திற்கு ஒரு நூற்றாண்டு கால வயதாகிறது. ஆர்எஸ்எஸ் மூன்று வருடத்திற்குப் பின்பு தன்னுடைய நூற்றாண்டை கொண்டாட உள்ளது. இந்திய சுதந்திரப் போராட்ட இயக்கத்தின் போதும் சுதந்திரத்திற்குப் பிந்தைய துவக்ககால பத்தாண்டுகளிலும் ஆர்எஸ்எஸ் பலவீனமானதாக, தனிமைப்படுத்தப்பட்டதாக, பெருமளவில் மதிப்பிழந்ததாக இருந்தது. ஆனால், இன்று மத்தியிலும் இந்தியாவின் பெரும்பாலான மாநிலங்களிலும் அதிகாரத்தைக் கொண்டுள்ள சாதகமான சூழலில் இருந்தும், இந்தியாவின் பெரும்பாலான நிறுவனங்களுக்குள் வளர்ந்து வருகிற அதன் ஊடுருவல் காரணமாகவும், அது தன்னுடைய இந்து மேலாதிக்க, ஜனநாயக விரோத நிகழ்ச்சிநிரல் மற்றும் பார்வைக்கு தகுந்தவாறு, இந்தியாவை மறு வடிவமைப்பும், மறுவரையறையும் செய்வதற்கு, "இப்போது இல்லையேல் இனி எப்போதும் இல்லை" என்ற நிலையை அது அடைந்து விட்டதாகக் கருதுகிறது. ஆர்எஸ்எஸ்ஸின் இந்தத் திட்டத்தை முறியடிக்கும் பொறுப்பு கம்யூனிஸ்டுகளுக்கும் இதர முற்போக்கு சக்திகளுக்கும் உள்ளது. சுதந்திரப் போராட்ட இயக்கம் நமக்கு தீவிர முற்போக்கு வழிமரபை கொடுத்திருக்கிறது. அவற்றில் பெரும்பாலானவை நிறைவேற்றப் படவில்லை. இப்போது மீதமிருந்தவையும் ஒன்று அழிக்கப்படுகின்றன அல்லது திரும்பப் பெறப்படுகின்றன. அது வேற்றுமைகளை, பன்மைத்துவத்தை மதிக்கிற, மதச்சார்பற்ற, அனைவரையும் உள்ளடக்கிய தேசிய அடை யாளத்தைக் கொடுத்தது. அது ஏகாதிபத்திய எதிர்ப்பு, காலனிய எதிர்ப்பு, பாசிச எதிர்ப்பு விழிப்புணர்வின், இருபதாம் நூற்றாண்டிற்கு உணர்வளித்த சோசலிச கனவின் சர்வ தேசியத்தின்

ஒரு பகுதியாக நம்மை உருவாக்கி இருந்தது. அது நிலப்பிரபுத்துவத்தை அழித்து ஒழிக்கவும் கடனிலிருந்து விடுபடவுமான விவசாய அறிக்கையை (Kisan manifesto) நமக்குக் கொடுத்தது. சாதியை ஒழிப்பதற்கு, சமூக சமத்துவத்திற்கான அறைகூவலையும் மக்கள் நலனுக்காக நாட்டின் வளங்களை பயன்படுத்து வதற்கான பொருளாதார பார்வையையும் நமக்கு கொடுத்தது. அது உரிமைகள் பற்றிய பிரகடனம் அடங்கிய அரசமைப்புச் சட்டத்தை நமக்கு கொடுத்தது. இந்த செழிப்பான வழிமரபு ஆயுதங்களை கொண்டு சுதந்திரத்திற்கான, பாசிசத்திலிருந்து சுதந்திரத்திற்கான புதுப்பிக்கப் பட்ட யுத்தத்தை நாம் நடத்தியாக வேண்டும்.

இடதுசாரி இயக்கத்தில் உள்ள நாம் எல்லோரும் நமது அனைத்து சக்திகளையும் திரட்டிக்கொண்டு போராட சூழல் நம்மை முற்றிலுமாக நிர்ப்பந்திக்கிறது. பல்வேறு மாநிலங்களிலும் அகில இந்திய அளவிலும் கூட மேலான ஒருங்கிணைப்பை நாம் வெற்றி கண்டிருக்கிறோம். நாம் ஒன்றாக இருந்து பீகாரில் சிறப்பான தேர்தல் வெற்றிகளை பெற்றுள்ளோம். உங்கள் வரைவுத் தீர்மானத்தில் குறிப்பிட்டிருப்பது போல மேற்கு வங்கத்தில் நமது செயல் தந்திர வழியிலான வேறுபாடு முன்னுக்கு வந்தது உண்மைதான். அதுபோன்ற வித்தியாசங்களை தோழமை உணர்வுடன், பரந்த இடதுசாரி ஒற்றுமை என்ற நலனை முன்வைத்து பொறுப்புடன் நாம் நடந்து கொள்வதன் மூலமும் பாசிச தாக்குதலுக்கு எதிராக நமது சக்தியையும் கவனத்தையும் ஒன்று குவிப்பதன் மூலமும் கையாள முடியும் என்று நாங்கள் நம்புகிறோம். வரும் காலங்கள் சவால்கள் நிறைந்ததாக இருக்கும். நாம் இணைந்து பயணித்து ஜனநாயகத்துக்கான போரை முன்னெடுத்துச் செல்ல முடியும் என நாங்கள் நம்புகிறோம்.

நாம் போராடுவதற்காக ஒன்றுபடுவோம்!
வெற்றி பெறுவதற்காகப் போராடுவோம்!

இகக(மா)வின் 23வது காங்கிரஸ் வெற்றி பெற வாழ்த்துக்கள்!
இன்குலாப் ஜிந்தாபாத்!
இடதுசாரிகளின் ஒற்றுமை நீடூழி வாழ்க!
அனைத்து முற்போக்கு, போராடும் சக்திகளின் ஒற்றுமை நீடூழி வாழ்க!

**திபங்கர் பட்டாச்சார்யா**
**பொதுச் செயலாளர்**
**இகக(மாலெ) (விடுதலை**

**தமிழாக்கம் – தேசிகன்**

# புதுச்சேரியில் தொடரும் எல் அண்ட் டி போராட்டம்



புதுச்சேரி எல் அண்ட் டி ஆலைகளில் தொழிலாளர்கள் போராட்டம் 30 நாட்களாக நீடிக்கிறது. சட்ட பூர்வ வேலை நிறுத்தத்தின் போது நிர்வாகம் புதிய தொழிலாளர்களை பணிக்கு அமர்த்துவதை புதுச்சேரி அரசு தடை செய்யாமல் வேடிக்கை பார்த்துக் கொண்டிருக்கிறது. நிர்வாகம் சென்னை உயர்நீதிமன்றத்தை அணுகி தொழிலாளர்கள் ஆலை வளாகத்தைச் சுற்றி 500 மீட்டர் வரை போராட்டங்கள் நடத்த தடைபெற முயற்சி செய்தது. தொழிலாளர்களின் நியாயமான கோரிக்கைகளை பரிசீலித்த மாண்புமிகு நீதி அரசர் ஜெகதீஷ் சந்திரா, சங்கம் அமைதியான போராட்டத்திற்கு உறுதி அளித்த வகையில் நிர்வாகமும், சங்கமும் நீதியை நிலைநாட்டும் வகையில் பேசித் தீர்த்துக்கொள்ள நீதிமன்ற கண்காணிப்பில் சமரச தீர்வுக்கு உத்தரவிட்டார். உள்ளிருப்பு வேலைநிறுத்தத்தை ஆலைக்கு வெளியில் அமர்ந்து தொடரும் நிலையில் போராட்டத்தை சீர்குலைக்கும் வகையில் வட மாநிலத் தொழிலாளர்களையும் புதிய தொழிலாளர்களையும் போலி ஒப்பந்தக்காரர்கள் மூலம் நிர்வாகம் பணியில் அமர்த்தி வருகிறது. அடியாட்கள் போல் செயல்படும் ஒப்பந்தக்காரர்ளை அப்புறப்படுத்த வேண்டி 11. 4. 2022 அன்று புதுச்சேரி வடக்கு துணை மாவட்ட ஆட்சியர் அலுவலகம் முன்பு ஆர்பாட்டம் நடந்தது.

# வெற்றிகரமான வேலைநிறுத்தமும் 2022 மே நாள் செய்தியும்




மார்ச் 28–29, 2022ல் நடைபெற்ற அகில இந்திய வேலைநிறுத்தத்தை மாபெரும் வெற்றி பெறச் செய்த இந்திய தொழிலாளர் வர்க்கத்திற்கு 'ஒர்க்கர்ஸ் ரெசிஸ்டன்ஸ்' ஏடும் ஏஐசிசிடியூவும் பாராட்டுக்களைத் தெரிவித்துக்கொள்கிறது. மோடி தலைமையிலான பிஜேபி அரசாங்கம் மட்டுமல்ல, பல்வேறு பிஜேபி அல்லாத கட்சிகள் ஆளும் மாநில அரசாங்கங்களும் கூட மேற்கொண்ட எண்ணற்ற அச்சுறுத்தல்கள், அனைத்துவிதமான சூழ்ச்சிகள், மிரட்டல்கள், கைதுகள், அத்தியாவசியப் பணிகள் பராமரிப்புச் சட்டம் உள்ளிட்ட கருப்புச்சட்டங்களை ஏவுவது ஆகிய அனைத்தையும் மீறி இந்த வேலைநிறுத்தம் வெற்றிகரமாக்கப்பட்டிருக்கிறது.

இந்த வேலைநிறுத்தம் மாபெரும் முக்கியத்துவத்தை பெற்றிருக்கிறது. ஏனென்றால், தொழிலாளர்களின் இந்த வேலைநிறுத்தத்ததில் விவசாயிகள் தமது முழுவேகத்துடன் கலந்து கொண்டிருக்கிறார்கள். ஆதரித்து இருக்கிறார்கள். நாட்டின் தொழிலாளர் வர்க்க இயக்கத்தின் மிக முக்கியமான இலட்சியங்களில் ஒன்று "தொழிலாளர்கள் – விவசாயிகள் ஒற்றுமை" ஆகும். இப்படியொரு விவசாயிகள் – தொழிலாளர்களின் ஒற்றுமை, அது ஆரம்ப நிலையில்தான் உள்ளது என்றாலும் கூட, இந்த வேலைநிறுத்தத்தில் நிதர்ஷனமாகி இருக்கிறது என்பதை நாம் பெருமையுடன் சொல்லிக் கொள்ளலாம்.

இரண்டாவதாக, பல்வேறு துறைகளின் அமைப்புசாராத் தொழிலாளர்கள் பெரும் எண்ணிக்கையில் பங்கேற்றதனாலும் இந்த வேலைநிறுத்தம் முக்கியத்துவம் பெற்றிருக்கிறது. பெண் தொழிலாளர்களின் பங்கேற்பு குறிப்பாக, சுகாதாரத் தொழிலாளர்கள் (ASHA), அங்கன்வாடி, மதிய உணவுத் தொழிலாளர்கள் போன்ற திட்டப்பணியாளர்களின் பங்கேற்பு மற்றும் பல்வேறு துறைகளைச் சார்ந்த எண்ணற்ற ஒப்பந்தத் தொழிலாளர்கள் பங்கேற்பு உற்சாகம் தருவதாகவும், உத்வேகம் அளிப்பதாகவும் இருக்கிறது.

இந்த வேலைநிறுத்தம், பெருங்குழும (கார்ப்பரேட்) முதலாளித்துவ வர்க்கத்திற்கும் தொழிலாளர் வர்க்கத்திற்கும் இடையேயான முரண்பாட்டை திட்டவட்டமாக முன்கொண்டு வந்திருக்கிறது என்பது மூன்றாவது செய்தியும் மிக முக்கியமான செய்தியும் ஆகும். இந்த வேலைநிறுத்தத்தில் பெருங்குழும வர்க்கம் தன்னை ஒருவர்க்கமாக, தனது ஆதிக்கத்தை நிலைநாட்டிக்கொள்ள முயற்சித்து இருக்கிறது. குறிப்பாக,பிஜேபி ஆளும் மாநிலங்களில், பல்வேறு தொழிலதிபர் சங்கங்கள், இந்த வேலைநிறுத்தத்தை மிகப்பெரிய அளவில் வெற்றிகரமாக்கவேண்டுமென்ற தொழிலாளர்களின் எண்ணத்திற்கு எதிராக, வேலைநிறுத்தத்தைத் முறியடிப்போம் என அறிக்கை வெளியிட்டனர். கர்நாடக பிஜேபி அரசாங்கம், தொழிற்சாலைகளை இயக்க காவல் துறையின் பாதுகாப்பு வழங்கப்படுமென்று வெளிப்படையாக அறிவித்தது. பல தொழிலதிபர் சங்கங்கள், இந்த வேலை நிறுத்தத்திற்கு எதிராக தொழிற்சாலைகளை இயக்குவோம் என ஒருதலைப்பட்சமாக அறிவித்தன. பொதுவாக, வேலைநிறுத்தம் செய்யும் நாட்களில், சங்கங்களல்லாத தொழிற் சாலைகளில் வேலைநிறுத்தம் செய்திட, அந்த ஆலைத்தொழிலாளர்களிடம் வேண்டுகோள் விடுக்கும் விதமாக, தொழிற்சாலைகள் இருக்கும் பகுதிகளில் தொழிலாளர்கள் பேரணியாகச் செல்வார்கள். ஆனால், சங்கங்கள் இருக்கும் தொழிற்சாலை நிர்வாகங்கள், தொழிற்சாலைகளை இயக்க முடிவு செய்யும்போது, தொழிலாளர்கள் தொழிற்சாலை பகுதிகள் முழுவதும் வேலைநிறுத்தத்தை உறுதிசெய்வதோடு கூடவே, தங்களுடைய தொழிற்சாலை

களிலும் வேலைநிறுத்தப்படுவதை உறுதிசெய்வது தொழிலாளர்களின் பொறுப்பாகிவிடுகிறது. பெருங்குழும வர்க்கத்தினரின் சவாலை தொழிலாளர் வர்க்கம் திட்டவட்டமாகவும் துணிச்சலுடனும் எதிர்கொண்டது என்பதை இந்த வேலைநிறுத்த வெற்றி தெட்டத் தெளிவாகக் காட்டியிருக்கிறது.

கேரள அரசு ஊழியர்கள் வேலை நிறுத்தத்தில் கலந்து கொள்வதைத் தடுக்கும் விதமாக கேரள உயர்நீதிமன்றம் தலையீடு செய்தது. வேலைநிறுத்தம் செய்யும் போக்கு வரத்து ஊழியர்களுக்கு எதிராக ஹரியானா போன்ற மாநிலங்கள் அத்தியாவசியப் பணிகள் பராமரிப்புச் சட்டத்தைப் பயன்படுத்தின. மின்வாரிய ஊழியர்களுக்கு எதிராக அத்தியா வசியப் பணிகள் பராமரிப்புச் சட்டத்தை மஹாராஷ்டிரா கொண்டுவந்தது.

அத்தியாவசியப் பணிகள் பராமரிப்புச் சட்டம் போன்ற கறுப்புச்சட்டங்கள், கைதுகள், மாநில அரசு நிர்வாகத்தின் அடாவடித்தனம் ஆகியவற்றை மீறியே தொழிலாளர்கள் இந்த வேலைநிறுத்தத்தை மாபெரும் வெற்றி கரமானதாக ஆக்கியிருக்கிறார்கள். தொழிலாளர் வர்க்கத்தின் இப்படியான போர்க்குணமிக்க நடவடிக்கைக்கு 'ஒர்க்கர்ஸ் ரெசிஸ்டன்ஸ்' ஏடும் ஏஐசிசிடியூவும் தலைவணங்குகிறது.

பிஜேபி அல்லாத மாநில அரசாங்கங்கள் கூட மு.க.ஸ்டாலின் தலைமையிலான தமிழ்நாடும், மம்தா தலைமையிலான மேற்குவங்கமும் அரசு மற்றும் போக்குவரத்துத் தொழிலாளர்கள் வேலை நிறுத்தத்தில் பங்கு கொள்வதைத் தடுக்கும் விதத்தில் ஆணை பிறப்பித்தன. காங்கிரஸ் அரசாங்கங்களும் அதே பாதையைப் பின்பற்றின. மம்தா பானர்ஜி, தனது பெருங்குழும வர்க்க நலன்களுக்கு உண்மையாக இருக்கும் விதத்தில், உழைக்கும் மக்களின் எந்தவொரு பந்த் அல்லது வேலைநிறுத்த நடவடிக்கைக்கும் எதிராகவே எப்போதும் இருக்கிறார். தமிழ்நாட்டில் ஆளும் கட்சியான திமுக வேலைநிறுத்தத்திற்கு ஆதரவு வழங்கிய போதும், அதன் தொழிற்சங்கப் பிரிவான தொழிலாளர் முன்னேற்ற சங்கம் வேலைநிறுத்தத்திற்கு அழைப்பு விடுத்த அமைப்புகளில் ஒன்றாக இருந்தபோதும், தமிழ்நாடு மாநில அரசாங்கம், தனது பெருங்குழும வர்க்கநலனை வெளிப்படுத்தும் விதத்தில், வேலைநிறுத்தத்தை தீவிரமாக எதிர்த்தது. தங்களுடைய அரசியல் வண்ணமும் கருத்தியலும் என்னவாக இருந்த போதிலும், பொருளாதார விசயத்தில் ஒருமித்த கருத்து என்பது இந்த நாட்டிலுள்ள அனைத்து வகை அரசியல் கட்சிகள் மத்தியிலும் எப்போதுமே நிலவியிருக்கிறது. அதேபோல, பெருங் குழும வர்க்க நலன்களைப் பிரதிநிதித்துவப் படுத்துவ திலும் அனைத்து வகைக்கட்சிகள் மத்தியிலும் பிஜேபியிலிருந்து திமுக வரையிலும் ஒரு போட்டா போட்டிநிலவுகிறது. இந்த போட்டா போட்டி பொருளாதாரக் கொள்கைகளில் மட்டுமே அல்ல. தொழிலாளர் விரோத, மக்கள் விரோத தொழிலாளர் சட்டத் தொகுப்பு என்ற விசயத்திலும் கூட, அனைத்துக் கட்சிகளும் ஒருமித்த கருத்து கொண்டுள்ளனர். "புதிய இந்தியாவுக்கான புதிய சட்டத்தொகுப்புகள்" என பிஜேபி அதனை அழைக்கிறது. ஆனாலும், உண்மையில், அவை "பெருங்குழும இந்தியாவுக் கான பெருங்குழும சட்டத் தொகுப்புகள்" தான். அவை நவீன அடிமைத் தனத்தை உருவாக்கும் சட்டங்களே தவிர வேறல்ல என தொழிற் சங்கங்கள் சொல்கின்றன. ஒன்றிய சட்டங்களுக்கு பொருத்தமான விதிகளைமாநில அரசாங்கங்கள் உருவாக்காமல் இந்தச்சட்டத் தொகுப்புகளை அமல்படுத்த முடியாது. இந்தத் தொழிலாளர் சட்டத்தொகுப்புகளை அமல்படுத்த பிஜேபி ஆளும் மாநிலங்கள் ஏற்கனவே விதிகளை உருவாக்கிவிட்டன. பிஜேபி அல்லாத கட்சிக ளால் ஆளப்படும் மாநிலங்களும் இந்தச் சட்டங்கள் தொடர்பான விதிகளை உருவாக்கத் துவங்கிவிட்டன. தொழிலாளர்களுக்கு எதிர்மறை விளைவுகளை ஏற்படுத்தாத வண்ணம் விதிகளை உருவாக்கப் போவதாக அவர்கள் சொல்கின்றனர். இப்படியான வாதம் முழுக்க முழுக்க தர்க்க நியாயங்கள் ஏதுமற்றதாகவே தெரிகிறது. மேலும், தொழிலாளர்களை ஏமாற்றுவதையே நோக்க மாகக் கொண்டுள்ளது. ஏனென்றால், ஒன்றியத்தி லுள்ள மோடி தலைமையிலான பிஜேபி அரசாங்கம் இயற்றியுள்ளசட்டத்தொகுப்புகளுக்கு எதிராக, எந்த மாநில அரசாங்கமும்விதிகளை உருவாக்க முடியாது. தொழிலாளர் வர்க்கத்தை நவீன அடிமைகளாக்கவே இந்தச் சட்டத் தொகுப்புகள் எழுதப்பட்டுள்ளன எனத் தொழிற் சங்கங்கள் கூறும்போது, மாநில விதிகள் மூலமாக மட்டும் அதை மாற்றிவிட முடியாது. ஆனால், எதிர்கட்சிகள் ஆளும் அனைத்து மாநிலங்களும் மாநில விதிகளை உருவாக்க தற்போது மும்முரமாக செயல்பட்டுக் கொண்டிருகின்றன. கேரளாவிலுள்ளஇடதுசாரிகள் தலைமையிலான மாநில அரசாங்கமும்கூட ஒரு

புறம் ஒன்றியச் சட்டத்தை அமுல்படுத்திட தேவையான மாநில விதிகளை உருவாக்குவதிலும், மறுபுறம், "கே-ரயில், ஒரு சில்வர்லைன் திட்டம்" என்ற, பெருங்குழும ஆதரவு கேரள பாணி புல்லட் ரயில் திட்டத்தை அமல்படுத்துவதிலும் மும்முரமாகஇருக்கிறது. தொழிலாளர் அரங்கிலும்சரி, ரயில் திட்டத்திலும்சரி, கேரள இடதுசாரி அரசாங்கமும்கூடபெருங்குழும ஆதரவு, தாராளவாத ஆதரவு கொள்கைகளையேபின்பற்றிவருகின்றது. திமுக அரசாங்கம், ஒரு டிரில்லியன் டாலர் (பத்தாயிரம் கோடி டாலர்) பொருளாதாரம் எனச் சொல்லும்போது, "தொழில் மயமாக்கல்" என்ற பெயரில் மம்தாவும் இதனையே செய்கிறார். எனவே, தொழிலாளர் வர்க்கத்திற்கும் உழைக்கும் வெகுமக்களுக்கும் எதிரான, பெருங்குழும வர்க்க ஆதரவு நிலை (corporate consensus)என்பது,பிஜேபி, காங்கிரஸ், பிராந்தியக் கட்சிகள் மற்றும் இடதுசாரிகள் உள்ளிட்ட அனைத்துக் கட்சிகள் மத்தியிலும் நிலவுகிறது என்பது வெட்ட வெளிச்சமாகிறது.

இப்படிப்பட்ட பின்னணியில், தொழிலாளர் விரோத சட்டத் தொகுப்புகளுக்கு எதிரான, தொழிலாளர் வர்க்கத்தின் மீதான இதர தாக்குதல்களுக்கு எதிரான போராட்டத்தைநாம் மறுவரையறை செய்திட வேண்டிய, அதற்கோர் புதிய முக்கியத்துவம் கொடுக்க வேண்டிய அவசியம் இருக்கிறது. சூழலின் தேவைக்கேற்பதொழிலாளர் வர்க்கம் எழுந்திடவேண்டும். பெருங்குழும முதலாளித்துவ வர்க்கத்திற்கும் தொழிலாளர் வர்க்கத்திற்கும் இடையேயான வர்க்கப் போராட்டத்தில், தொழிலாளர் வர்க்கம் தன்னுடைய மேலாதிக்கத்தை நிறுவிடவேண்டும். தொழிலாளர் சட்டத் தொகுப்புகளுக்கு எதிராக மட்டுமல்ல, மாநில அரசாங்கங்கள் உருவாக்கிக் கொண்டிருக்கிற மாநில விதிகளுக்கு எதிராகவும் இந்த வர்க்கப் போராட்டமானது, அரசியல் போராட்டம் என்ற பரிமாணத்தை எட்ட வேண்டிய தேவை இருக்கிறது.

தனியார்மயம், தேசிய பணமாக்கல் திட்டம்என்ற பெயரில் பெருங்குழுமங்களுக்கும் பன்னாட்டு நிறுவனங்களுக்கும் இந்த நாடு விற்கப்பட்டுக் கொண்டிருக்கும்போது, நாம் 2022 ஆம் ஆண்டின் மே நாளை நெருங்கிக் கொண்டிருக்கிறோம். தனியார்மயம் என்கிற, மோடி அரசின் உண்மையான நிகழ்ச்சி நிரல் முன்னுக்கு வந்துகொண்டிருக்கிறது. தனியார் மயத்தின் விளைவாகவும் அதைத்தொடர்ந்தும் பெரும் எண்ணிக்கையிலான வேலையிழப்புகளையும், அதிகரித்துக் கொண்டேயிருக்கும் வேலையில்லாத் திண்டாட்டத்தையும் காண்கிறோம். இவை அனைத்தும் தன்னெழுச்சியான போராட்டங்களையும் கலகங்களையும் உருவாக்கும் ஆற்றல் கொண்டவை. எனவே, தொழிலாளர் சட்டத் தொகுப்புகள், அதோடு இணைந்து வரும் அத்தியாவசியப் பணிகள் பராமரிப்புச் சட்டம், சட்டவிரோத நடவடிக்கைகள் தடுப்புச் சட்டம் உள்ளிட்ட கருப்புச் சட்டங்கள் ஆகியன, ஒருபுறம், தனியார் மயத்தையும் ஒப்பந்தத் தொழிலாளர் முறையையும் தீவிரப்படுத்துவதையும் மறுபுறம், அதன் விளைவாக எழத்தக்க கலகங்களை, தன்னெழுச்சியான போராட்டங்களை கட்டுப்படுத்துவதையும் நோக்கமாகக் கொண்டுள்ளன.

2022 மே நாளில், தனியார்மயத்தை, வேலையில்லாத் திண்டாட்டத்தை, தொழிலாளர் விரோத சட்டத்தொகுப்புகளை, கருப்புச் சட்டங்களை எதிர்த்துப் போராடதொழிலாளர் வர்க்கம் உறுதி ஏற்கவேண்டும்.

2022 மே நாளில் தொழிலாளர் வர்க்கம் பெரும் எண்ணிக்கையில் வீதிகளில் அணிவகுத்திட வேண்டும். வரலாற்றுச் சிறப்புமிக்க சிகாகோ போராட்டத்தையும் அதன் தியாகிகளையும் பெருமையுடன் நினைவு கூர்வதற்காக மட்டுமல்ல, இன்றைய காலகட்டத்தில் அத்தகைய வரலாற்றுச் சிறப்புமிக்க போராட்டங்களை நம்முடைய தாய்நாட்டு மண்ணில் மீண்டும் நிகழ்த்திக் காட்டிடுவதற்காகவும் அணிவகுத்திட வேண்டும்.

தனியார்மயத்திற்கு எதிரான, ஒப்பந்தத் தொழிலாளர் முறைக்கு எதிரான, வேலையில்லாத் திண்டாட்டத்திற்கு எதிரான, தொழிலாளர் சட்டத்தொகுப்புகள், கருப்புச் சட்டங்கள் ஆகியவற்றுக்குஎதிரான, தற்போதைய போராட்ட இயக்கத்தை, தொழிலாளர் வர்க்கம் வலுவாக முன்னெடுத்துச் சென்றிட வேண்டுமென நாம் அறைகூவல் விடுக்கிறோம்.

◆ தொழிலாளர் வர்க்கத்தின் ஒன்றுபட்ட, போர்க்குணமிக்கபோராட்டங்கள் நீடுழி வாழ்க!

◆ தொழிலாளர்கள் விவசாயிகள் ஒற்றுமை நீடுழி வாழ்க!

◆ புரட்சி நீடுழி வாழ்க!

◆ மே நாள் நீடுழி வாழ்க!

‘ஒர்க்கர்ஸ் ரெசிஸ்ட்டென்ஸ்’ 2022 ஏப்ரல்

**தமிழாக்கம் – செந்தில்**

# இலங்கையின் பொருளாதார நெருக்கடியும் ஆளும் வர்க்கத்தினரின் அலட்சியமும்

செந்தில்

**அரபு வசந்த எழுச்சியைப் போன்று மேலெழுந்து வரும் மக்கள் போராட்டங்கள்**

*கடந்த சில நாட்களாக இலங்கையில் மக்கள் போராட்டங்கள் அதிகரித்த வண்ணம் உள்ளது. சென்ற 2019ஆம் ஆண்டு நடந்த அதிபர் தேர்தலில் பெரும் வெற்றியை ஈட்டிய கோத்தபய ராஜபக்சே மீது தற்போது மக்களின் கோபம் திரும்பியுள்ளது. அவரைப் பதவி விலகக் கோரி, அவருடைய இல்லத்தின் முன்பு நடந்த போராட்டத்தில் வன்முறை வெடித்தது. அதிபர் மாளிகையின் முன்பு பத்துக்கும் அதிகமான போராட்டப் பந்தல்கள் போடப்பட்டுள்ளன. ஒவ்வொரு நாளும் புதிது புதிதாக போராட்டப் பந்தல்கள் முளைத்த வண்ணம் உள்ளன. இந்த அரசாங்கம் போதுமான "எதிர்வினையாற்றத் தவறிவிட்டது" என்ற குற்றச்சாட்டு பரவலாகி வருகிறது. புதிய புதிய போராட்டங்கள் பல இடங்களுக்கும் நாளுக்கு நாள் பரவுகிறது. கொழும்பிலுள்ள புகழ்பெற்ற கடற்கரை பகுதியில் இலங்கையின் தேசியக் கொடியை ஏந்தியப் போராட்டக்காரர்கள் "திருடன் கோத்தாவே வீட்டுக்குப் போ" என முழக்கமிட்டனர். கருப்பு உடையணிந்து கோரிக்கை அட்டைகளைத் ஏந்திக் கொண்டு, "அவர்கள் நம் நாட்டை சீரழித்து விட்டனர். நமக்கு இந்த அரசாங்கம் வேண்டாம்" எனக் கூறிய இளைஞர்களின் பெருங்கூட்டம் காலனி காலத்து அதிபரின் செயலகம் நோக்கி பேரணியாகச் சென்றது. சிங்களப் பேரின வாதத்தை ஆயுதமாகக் கொண்டு ஆட்சி செய்த ஆளும் வர்க்கத்தினருக்கு எதிராக சிங்கள மக்கள் வீதிகளில் இறங்கியிருப்பது கவனத்தில் கொள்ளப்பட வேண்டிய ஒன்று. ஆட்சியாளர்களின் பிரித்தாளும் சூழ்ச்சி அம்பலப்பட்டு விட்டதாகவே தெரிகிறது. பல உள்நாட்டு, வெளிநாட்டு பத்திரிக்கைகளும் இந்த எழுச்சிமிகு மக்கள் போராட்டத்தை "அரபு வசந்தத்துடன்" இணைத்து எழுதுகின்றனர். ஆக, தொடர்ந்த, நீடித்த போராட்டங்களை வரவிருக்கும் நாட்களில் இலங்கையில் காணலாம்.*

**இந்தப் போராட்டங்கள் ஏன்?**

*இலங்கையில் டீசல், பெட்ரோல், சமையல் எரிவாயு உருளைகளுக்கு பெரும் தட்டுப்பாடு நிலவுகிறது. அவற்றைப் பெற நீண்ட வரிசைகளில் மக்கள் காத்துக் கொண்டிருக்கிறார்கள். அவற்றின் விலையோ பல மடங்கு உயர்ந்துவிட்டது. திருமதி.சுகிரா, சுட்டெரிக்கும் வெயிலில் நான்கு மணி நேரத்திற்கும் மேல் காத்திருந்தார். "நல்லவேளை எனக்கு கிடைத்துவிட்டது" என நிம்மதி பெருமூச்சு விட்டபடி சொன்னார். பலருக்கும் அதற்கான வாய்ப்பு கிடைக்கவில்லை. அதில் சிலர் தங்கள் உயிரையும் இழந்துவிட்டனர். ஒரு தேநீரின் விலை நூறு இந்திய ரூபாய். ஒரு கிலோ சர்க்கரையின் விலையோ ரூ.300ஐ நெருங்கி விட்டது. பலர் தேநீர் குடிப்பதை மறந்துவிடும் நிர்பந்தத்திற்கு ஆளாகிவிட்டனர். ஒரு நாளைக்கு 13 மணி நேரம் மின்வெட்டு மக்கள் மீது திணிக்கப்பட்டுள்ளது. விலைவாசி உயர்ந்துவிட்டதாலும், மக்களின் வாங்கும் சக்தி வெகுவாக குறைந்துவிட்டதாலும் உணவகங்கள், பேக்கரிகள் மூடப்படும் நிலைக்கு வந்துவிட்டன. மருத்துவமனைகளில் அறுவை சிகிச்சைகள் தள்ளிவைக்கப்படுகின்றன. காகிதங்கள், அச்சடிக்கும் பொருட்களின் தட்டுப்பாட்டால் தினசரி பத்திரிக்கைகள் வெளிவருவது தடைப்பட்டுள்ளது. பள்ளிகள் தேர்வுகளை நிறுத்தி வைத்துள்ளன. ஒரு அமெரிக்க டாலருக்கு நிகரான இலங்கை ரூபாய் 300 ஆக உயர்ந்து, அதன் மதிப்பு வீழ்ந்துவிட்டது.*

*இந்தப் பொருளாதார நெருக்கடியின் காரணிகளாக "சீனாவின் கடன் பொறியில் சிக்கிக்கொண்ட இலங்கை", "ரஷ்யா உக்ரைன் போர்" போன்றவற்றை மேற்கத்திய ஊடகங்கள் பரப்புரை செய்கின்றன. சுதந்தரத்திற்குப் பிறகான இலங்கையின் வரலாற்றைக் கூர்ந்து நோக்குபவர்களுக்கு இந்த நெருக்கடியின் ஊற்றுக் கண்ணை காணுவதில் சிக்கலேதும் இருக்காது. என்றாலும் சில உடனடிப் பிரச்சினைகளும் இருக்கத்தான் செய்கின்றன.*

**காற்றில் கரைந்து போன அந்நியச் செலாவணிக் கையிருப்பு**

*ஏற்றுமதியும் சுற்றுலாவும் மட்டுமே*

இலங்கைக்கு வருமானம் ஈட்டித்தரும் மிக முக்கியமான தொழில்களாகும். மொத்த உள் நாட்டு உற்பத்தியில் ஏற்றுமதி 23 சதவீதமாகவும், சுற்றுலா 12 சதவீதமாகவும் உள்ளன. மிகப் பெருமளவு தேயிலை, ரப்பர், தேங்காய், மசாலா பொருட்கள் ஆகியவற்றை ஏற்றுமதி செய்கிறது. அதே நேரத்தில் முக்கிய உணவுப் பொருட்களான அரிசி, கோதுமை, சர்க்கரையையும் மருந்து களையும் பெட்ரோலியப் பொருட்களை முழுமையாகவும் இறக்குமதி செய்கிறது. ஏற்றுமதி செய்யப்படும் பொருட்களின் விலைகளுக்கு, உலக சந்தைகளில் ஏற்பட்ட வீழ்ச்சியின் காரணமாக, இந்த ஏற்றுமதி இறக்குமதிக்கு இடையிலான வேறுபாடு சமீப ஆண்டுகளில் பாரதூரமாக அதிகரித்துவிட்டது. ஆக, இறக்குமதி செய்யப்படும் அவசியமான பொருட்களோடு, ஆடம்பர சொகுசுகார்கள் போன்றவற்றை இறக்குமதி செய்யவும் அதிகப்படியான அந்நியச் செலாவணி செலவழிக் கப்பட்டது.

2019ல் நிகழ்ந்த தொடர் குண்டு வெடிப்பு களால் (இதற்கு கோத்தபய ராஜபக்சே தான் காரணம் என்ற குற்றச்சாட்டு பரவலாக உள்ளது) ஏற்கனவே சுற்றுலா பயணிகளின் வருகை மிகக் கடுமையாகப் பாதிக்கப்பட்டு இருந்தது. அதேவேளையில், கோவிட்19 பெருந்தொற்று காரணமாக உலகம் முழுவதும் மேற்கொள்ளப் பட்ட முழுஅடைப்பின் விளைவாக, சுற்றுலா விலிருந்து கிடைத்த வருமானம் முழுவதும் நின்றுவிட்டது. மேலும், வெளிநாடு களில் நிகழ்ந்த வேலை இழப்பின் காரணமாகவும் அந்நியச் செலாவணி வரத்து வெகுவாகக் குறைந்துவிட்டது.

**திடீர் இயற்கை விவசாயத்தால் நிகழ்ந்த விபரீதம்**

அந்நியச் செலாவணி கையிருப்பை தக்கவைக்கவும் சிறுநீரகக் கோளாறுகளுக்கு காரணமெனவும் நம்பப்பட்ட செயற்கை உரங்களின் இறக்குமதிக்கு மே 2021ல் திடீரென தடைவிதிக்கப்பட்டது. ஒரே இரவில் இலங்கைத் தீவின் ஒட்டுமொத்த விவசாயமும் இயற்கை முறைகளுக்கு மாற்றப்பட்டது. அப்போதே அதற்கு எதிராக விவசாய அறிவியலாளர்கள் எதிர்ப்பு தெரிவித்து அதிபருக்குக் கடிதம் எழுதினர். உணவுப்பாதுகாப்பு, விவசாய வருமானம், ரப்பர் ஏற்றுமதியால் கிடைக்கும் அந்நியச் செலாவணி வருமானம் ஆகியன பாதிப்புக்குள்ளாகும்; கிராமப்புற வறுமை அதிகரிக்கும் என்று அவர்கள் அச்சம் தெரிவித் தனர். ஆனாலும் அறிவியலுக்கு புறம்பான இந்த நடவடிக்கை தொடர்ந்து அமல்படுத்தப்பட்டது. இதனால் அடுத்தடுத்த விளைச்சலில் நெல், சோளம், தேயிலை உற்பத்தி பாதிக்கப்பட்டது. நெல் உற்பத்தியில் மட்டும் 40 முதல் 45% வரை இழப்பு ஏற்பட்டது. கால்நடைத் தீவன உற்பத்தியும் குறைந்தது. இறைச்சித் தட்டுப்பாடு நிலவி சில்லறை வர்த்தகத்தில் இறைச்சி விலை யேற்றம் அதிகரித்தது. இந்த பின்விளைவுகளால், நவம்பர் 2021ல் இந்தத் திட்டம் திரும்பப் பெறப்பட்டது. ஆனாலும் இலங்கைப் பொருளாதாரத்திற்கு இது பெருத்த நெருக்கடியை ஏற்படுத்திவிட்டது.

**சர்வதேச நாணய நிதியத்தின் (சநாநி) கடன் என்னும் விஷச்சுழல்**

1977ல் துவங்கி இதுவரையிலும் பல முறைகள் இலங்கை சநாநியிடம் கடன் வாங்கியுள்ளது. ஒவ்வொரு முறையும் சநாநி, இலங்கைக்கு பல்வேறு நிபந்தனைகளை விதிக்கிறது. நாணய மாற்றில் தாராள (மற்ற நாட்டு நாணயங்களுக்கு குறிப்பாக அமெரிக்க டாலருக்கு இலங்கை நாணயத்தை மாற்றும் போது அதன் மதிப்பை குறைத்துக்கொள்வது) அணுகுமுறை, இலங்கை ரூபாயின் மதிப்பை குறைப்பது, விலைக் கட்டுப்பாடுகளை ஒழித்துக்கட்டுவது, உணவு மானியங்களை வெட்டுவது, கூலி உயராமல் தடுப்பது, வட்டி விகிதங்களை குறைப்பது, தனியார் நிறுவனங் களை ஊக்கப்படுத்துவது, அந்நிய முதலீட்டை அதிகரிப்பது, அரசாங்க செலவினத்தைச் சுருக்குவது, போன்ற பொருளாதாரச் சீர்திருத் தங்களை மேற்கொள்ள வேண்டும் என்ற நிபந்தனைகளோடுதான் கடன் வழங்கப் படுகிறது. இப்படியானக் கடன்களிலிருந்து ஒரு நாடு வெளியேறுவது என்பது இயலாத ஒன்று.

**தாராளமயமும் சிங்களப் பேரினவாதமும்**

இப்படியான நவதாராளவாத பொருளாதார சீர்திருத்தத் திட்டங்களின் காரணமாக 1970களில் இலங்கையில் மக்களின் வருமானம் வீழ்ச்சி யடைந்தது. வருமானத்தில் சமத்துவமின்மை உருவாகியது. இந்தப் பின்னணியில் நிகழ்ந்த பொருளாதார இடர்பாடுகளால் வெளிப்பட இருந்த மக்களின் கோபத்தை திசைதிருப்ப வேண்டிய அவசியம் ஆளும் வர்க்கத்திற்கு ஏற்பட்டது. அதனை சமன் செய்ய, சிறுபான்மை தமிழ் மக்கள் மீது திட்டமிட்ட வகையில் பாகுபாடு காட்டப்பட்டது. அரசு ஒடுக்குமுறை நிகழ்த்தப்பட்டது. இனப்படுகொலை அரங்கே

றியது. தமிழ் மக்கள் மீதான சிங்களப் பேரின வாத அரசின் இனவெறித் தாக்குதல்களை எதிர்கொள்ளும் போக்கில், தமிழீழ விடுதலை இயக்கங்கள் உருவாகி உள்நாட்டுப் போருக்கு வழிவகுத்தது. 1983 முதல் 2009 வரை நிகழ்ந்த போரில் 80,000 முதல் 1 லட்சம் வரையிலான தமிழீழ விடுதலைப் போராளிகள், அப்பாவித் தமிழர்கள், சிங்கள இராணுவத்தினர் உள்ளிட்ட வர்கள் கொல்லப்பட்டனர். போருக்காக சுமார் 20 ஆயிரம் கோடி டாலர் செலவிடப் பட்டிருக் கலாம் என புள்ளி விவரங்கள் தெரிவிக்கின்றன. இந்த உள்நாட்டுப் போர் இலங்கைப் பொருளா தாரத் திற்கு பெரும் நெருக்கடியை ஏற்படுத்திக் கொடுத்தது.

**நெருக்கடிக்குக் காரணமான, அதன் தீவிரத்தை கண்டுகொள்ளாத ராஜபக்சேக்கள்**

இலங்கையின் இந்த நெருக்கடிக்கு மற்றொரு முக்கியக் காரணகர்த்தாக்களாக இருப்பது ராஜபக்சே குடும்பத்தினரே. இப்போதைய பிரதமரான மகிந்த ராஜபக்சே, 2005–2015ல் அதிபராக இருந்தபோது, உள்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்தவென சீனாவிடமிருந்து 700 கோடி டாலர் கடன் வாங்கப்பட்டது. அதில் பெரும்பகுதியை இவர் ஊழலில் 'ஸ்வாஹா' செய்துவிட்டார். இப்போதைய அதிபர் 'த டெர்மினேட்டர்' கோத்தபய ராஜபக்சே 2009ல் விடுதலைப் புலிகளுக்கு எதிராக நடந்த போரின் இறுதிக்கட்டத்தில் ஈழத்தமிழர்கள் மீது கடும் வன்முறையை நிகழ்த்தியவர். போருக்காக செலவிடப்பட்ட நிதியில் பல முறைகேடுகள் நடந்ததாகவும் நம்பப்படுகிறது. மேலும், இவர் 2019ல் ஆட்சிக்கு வந்தபிறகு பெருமளவிற்கு வரிவிலக்கு அளிக்கப்பட்டது. உதாரணமாக, 28% இருந்த கார்ப்பரேட் வருமானவரி 24% என குறைக்கப்பட்டது. சில நாட்களுக்கு முன்பு பதவி விலகிய நிதியமைச்சர் 'மிஸ்டர் டென் பெர்சன்ட்' என அழைக்கப்படும் பசில் ராஜபக்சே அரசாங்க ஒப்பந்தங்களில் 10% கமிசன் பெற்றிருக்கிறார். சில மாதங்களுக்கு முன்பு வரையிலும், இந்தப் பொருளாதார நெருக்கடியின் தீவிரத்தையோ, மக்கள்படும் வேதனைகளையோ அவர்கள் அங்கீகரிக்கவில்லை. பிறகு எப்படி அதனை எதிர்கொண்டு சமாளிக்கும் திட்டங்களை வகுப்பார்கள்?

இதனால் நகர்ப்புற அடித்தட்டு மக்கள் மிகக் கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளனர். அதுமட்டு மல்ல, நடுத்தர வர்க்கத்தினரும் நுனிநாக்கில் ஆங்கிலம் பேசும் உயர்நடுத்தர வர்க்கத்தினரும் கூட, நெருக்கடியின் வெம்மையை அனுபவிக் கின்றனர். புகழ்மிக்க விளையாட்டு வீரர்கள் கூட அறிக்கைகள் விடுமளவுக்கு நெருக்கடித் தாண்டவமாடுகிறது. ராஜபக்சே குடும்பத்தினரின் நிதி முறைகேடுகளும், தான்தோன்றித்தனமான செயல்பாடுகளும் இன்றைய நெருக்கடிக்கு முக்கிய காரணம் என்பதை இவர்களுக்கு பெரும் அரசியல் ஆதரவு வழங்கிய சிங்களப் பெரும் பான்மை மக்களே தற்போது உணர்ந்துவிட்டனர். எதிர்க்கட்சிகளும் போராட்டப் பாதையில் குதித்துள்ளனர். ராஜபக்சே குடும்பத்தினர் பலர் ரகசியமாக வெளிநாடுகளுக்கு சென்றுவிட்டனர்.

**நெருக்கடியிலிருந்து மீள்வது எப்படி?**

இந்த நெருக்கடியிலிருந்து மீள, உடனடி நடவடிக்கைகளாக மீண்டும் கடன் வாங்கும் சில முயற்சிகள் எடுக்கப்பட்டுள்ளன. இந்தியா 100 கோடி டாலர் கடனுதவி அளித்திருக்கிறது. மேலும் 150 கோடி டாலர் கடனுதவி அளிப்ப தற்கான திட்டமும் உள்ளது. மேலும் அத்தியா வசியப் பொருட்கள் உள்ளிட்ட வேறுபல உதவிகளும் அளித்து வருகிறது. இலங்கை நிதியமைச்சர், சீனா உள்ளிட்ட வேறுசில நாடுகளிடமும் உதவி கேட்டுள்ளார். ஆனாலும், இந்தப் பொருளாதார நெருக்கடி ஏற்படுத்தியுள்ள சவாலை எதிர்கொள்ளத் தேவையான நீண்டகாலத் திட்டங்கள் எதுவும் கண்ணுக்குத் தெரியவில்லை. ஏகாதிபத்திய சார்பு நவதாராள பொருளாதாரக் கொள்கைகள், திருப்பிச் செலுத்த முடியாத அளவு கடன்கள், இனப்பாகுபாடு ஆகியவற்றுக்கு மாற்றாக அனைத்துப் பிரிவு மக்களையும் உள்ளடக்கிய, மக்கள் சார்பு பொருளாதாரத் திட்டங்கள் மட்டுமே இலங்கையை இந்த நெருக்கடியில் இருந்து நிரந்தரமாக மீட்கும் வழியாக இருக்கமுடியும். இந்தியாவுக்கு இதுவொரு பாடம். ❑

இலங்கையில், விலைவாசி உயர்வு, மின்வெட்டு, கடுமையான பொருளாதார நெருக்கடிகளை எதிர்த்து எழுச்சி பெற்றுள்ள இலங்கை மக்களுக்கு ஒருமைப்பாடு தெரிவித்துக் கொள்கிறோம். இந்த (மக்கள்) இயக்கத்தை அவசரநிலைப் பிரகடன அறிவிப்பின் மூலம் ஒடுக்க முனையும் முயற்சிகளையும் கண்டிக்கிறோம்.

**மத்தியக் கமிட்டி,**
**இகக(மாலெ) லிபரேஷன்**

# சொத்து வரி உயர்வும் சமத்துவ நாள் அறிவிப்பும் சம்பந்தமில்லாமல் இருக்கலாமா?

ரமேஷ் கணபதி

கடந்த ஏப்ரல் 2ம் தேதி தமிழ்நாடு அரசு பேரூராட்சி, நகராட்சி, மாநகராட்சிகளில் சொத்துவரியை உயர்த்தியுள்ளது. 25% முதல் 150% வரை உயர்த்தப்பட்டுள்ளது. 600 சதுர அடிக்குக் குறைவான குடியிருப்புக் கட்டிடங்களுக்கு 25% சொத்து வரி உயர்த்தப்பட்டுள்ளது. 601 முதல் 1200 சதுர அடி பரப்பளவு கொண்ட குடியிருப்புக் கட்டிடங்களுக்கு 50% வரி உயர்த்தப்பட்டுள்ளது. 1201 முதல் 1800 சதுர அடி பரப்பளவு கொண்ட குடியிருப்புக் கட்டிடங்களுக்கு 75% சொத்து வரி விதிக்கப்பட உள்ளது. 1800 சதுர அடிக்கு மேற்பட்ட குடியிருப்புக் கட்டிடங்களுக்கு 100% சொத்து வரி உயர்த்தப்பட்டுள்ளது. வணிக பயன்பாட்டுக் கட்டிடங்களுக்கு 100% சொத்து வரி உயர்த்தப்பட உள்ளது. ஆனால், தொழிற்சாலை, கல்வி நிலைய பயன்பாட்டுக் கட்டிடங்களுக்கு 75% மட்டுமே வரி உயர்வு. கல்வி நிலைய அதிபர்களும் தொழிற்சாலை அதிபர்களும் அதிக பரப்பளவு கொண்ட இடங்களை வைத்துள்ளார்கள் என்றபோதிலும் வணிகர்களைவிட வருமானத்தில் குறைவானவர்கள் போலும்.

தமிழ்நாட்டில் மொத்தம் 21 மாநகராட்சிகள் உள்ளன. இதில் சென்னைக்கு தனியாக வரி விதிப்பு. இதர 20 மாநகராட்சிகளுக்கும் தனியாக சொத்து வரி விதிப்பு உயர்வு அமல்படுத்தப்பட உள்ளது. சென்னையைப் பொறுத்தவரை சென்னையின் மையப் பகுதிகளில் உள்ள குடியிருப்புக் கட்டிடங்களுக்கு 600 சதுர அடி பரப்பளவிற்கு 50% சொத்து வரி உயர்த்தப்படுகிறது. 2011ல் சென்னையுடன் சேர்க்கப்பட்ட பகுதிகளில் உள்ள குடியிருப்புகளுக்கு 25% வரி உயர்வு. அதாவது அடையாரில் 600 சதுர அடி பரப்பளவு உள்ள குடியிருப்புக் கட்டிடங்களுக்கு 50% வரி உயர்வு. ஆலந்தூரில் உள்ள குடியிருப்புக் கட்டிடங்களுக்கு 600 சதுர அடி பரப்பளவிற்கு 25% வரி உயர்வு என்று அறிவிக்கப்பட்டுள்ளது. அடையாரில் 600 சதுர அடி பரப்பு கொண்ட கட்டிடத்திற்கு தற்போது அரையாண்டிற்கு ரூ.308 என்று உள்ளது இனி ரூ. 462 ஆகும். ஆலந்தூரில் 600 சதுர அடி பரப்பு கொண்ட குடியிருப்புக் கட்டிடத்திற்கு தற்போது அரையாண்டிற்கு ரூ.320 என்பது இனி ரூ.400 ஆகும். அதே வேளை அடையாறில் 1201 சதுர அடியில் இருந்து 1800 சதுர அடி பரப்பளவு உள்ள குடியிருப்புக் கட்டிடங்களுக்கு இப்போது அரையாண்டிற்கு ரூ.1461 வரி வசூல் செய்யப்படுகிறது. இனி அது ரூ.2922 ஆகும். ஆலந்தூரில் 1201–1800 சதுர அடி பரப்பளவு குடியிருப்புக் கட்டிடங்களுக்கு அரையாண்டிற்கு ரூ.825 லிருந்து ரூ.1444 ஆகும்.

ஆனால், சென்னை முக்கிய நகரப் பகுதிகளில் உள்ள 601–1200 சதுர அடி உள்ள குடியிருப்புக் கட்டிடங்களுக்கு 75% வரி உயர்வும் 1201–1800 சதுர அடி பரப்புள்ள குடியிருப்புக் கட்டிடங்களுக்கு 100% வரி உயர்வும் 1800 மேல் பரப்பு கொண்ட குடியிருப்புக் கட்டிடங்களுக்கு 150% வரி உயர்வும் அறிவிக்கப்பட்டுள்ளது.

83% குடியிருப்புக் கட்டிடங்கள் 25% மற்றும் 50% வரி உயர்வு வரையறைக்குள்தான் வருகிறது என்று அமைச்சர் கே.என்.நேரு கூறுகிறார். மேலும் 2018ல் அதிமுக ஆட்சிகாலத்தில் 200% வரி உயர்வு ஒரே வகையில் அறிவித்தார்கள், தேர்தல் வருகிறது என்பதால் முழுமையாக அதை நிறுத்தி வைத்திருந்தார்கள், ஆனால் முதல்வர் ஸ்டாலின் ஏழைகளுக்கு கொஞ்சம் குறைவாகவும் 1800 சதுர அடிக்கு மேல் உள்ள கட்டிடங்களுக்கு கூடுதலாக வரியை உயர்த்தியிருக்கிறார் என்று கூறுகிறார். மேலும்

ஒன்றிய அரசால் அமைக்கப்பட்ட 15வது நிதி ஆணையத்தின் கட்டாயத்தின் பேரில்தான் சொத்து வரி உயர்த்தப்பட்டுள்ளது. மார்ச் 31க்குள் சொத்து வரியை உயர்த்தவில்லை என்று சொன்னால் உள்ளாட்சி அமைப்புகளுக்கு தர வேண்டிய ரூ.15,000 கோடியை விடுவிக்க முடியாது என்று ஒன்றிய அரசு வெளிப்படையாகவே சொல்லியுள்ளது என்கிறார் நகராட்சி நிர்வாகத்துறை அமைச்சர் கே.என்.நேரு. கடந்த ஆண்டு உள்ளாட்சி அமைப்புகளுக்கான தேர்தல் நிலுவையில் இருந்ததால் சுமார் ரூ.7000 கோடியை ஒன்றிய அரசு விடுவிக்கவில்லையாம். சென்னையைப் பொறுத்தவரை 24 ஆண்டுக

ளுக்குப் பின்னரும் பிற பகுதிகளைப் பொறுத்த வரை 14 ஆண்டுகளுக்குப் பின்னர்தான் சொத்து வரி உயர்த்தப்படுகிறது என்கிறார் அமைச்சர்.

உள்ளாட்சி அமைப்புகளுக்கு ஒன்றிய அரசின் கீழான திட்டங்களுக்கு வழங்கப்பட வேண்டிய நிதியைத் தர வேண்டும் என்றால், சொத்து வரியை உயர்த்த வேண்டும் என்று ஒன்றிய அரசு உத்தரவிடுகிறது என்றால் இது வன்மையாகக் கண்டிக்கத்தக்கது. மக்களின் வரிப் பணத்தில் இருந்து, மக்கள் வங்கிச் சேமிப்பில் இருந்து அதானிகளுக்கும் அம்பானிகளுக்கும் சலுகைகளையும் கடன்களையும் அள்ளிக் கொடுக்கும் மோடி அரசு, அவர்கள் வங்கியில் வாங்கிய கடனை அடைக்கவில்லை என்றால் அதானிக்கும் அம்பானிகளுக்கும் பல லட்சம் கோடி ரூபாய் தள்ளுபடி செய்யும் மோடி அரசு, மக்களிடம் வசூலித்த ஜிஎஸ்டியில் இருந்து மாநிலங்களுக்கு அளிக்கும் பங்கைக் கொடுக் காமல் இழுத்தடிக்கும் மோடி அரசு, உள்ளாட்சி அமைப்புகளுக்கான நிதியை வழங்க சொத்து வரியை உயர்த்தச் சொல்வது என்பது மோடி அரசின் கார்ப்பரேட் ஆதரவு மக்கள் விரோத கோர முகத்தை அப்பட்டமாக வெளிப் படுத்துகிறது. அதற்கு எதிராக மாநில அரசு கண்டனக் குரல் எழுப்ப வேண்டுமேயொழிய மாறாக ஒன்றிய அரசின் உத்தரவை அமல்படுத்தி, மோடிக்கு எதிராக ஸ்டாலினுக்கு வாக்களித்து அரியணை ஏற்றிய மக்களை வஞ்சிக்கக் கூடாது.

முந்தைய அதிமுக அரசு போல், இப்போது இருக்கும் திமுக அரசு, ஒன்றிய அரசு சொல்லும் அனைத்தையும் அப்படியே ஏற்றுக்கொண்டு செயல்படுத்திக் கொண்டிருக்கிறதா? இல்லையே. நீட் தேர்வு ரத்து செய்யப்பட வேண்டும் என்று சட்டமன்றத்தில் தீர்மானம் நிறைவேற்றபடுகிறது. அதை ரத்து செய்ய அனுப்பிய தீர்மானத்தினை ஆளுநர் குடியரசுத் தலைவருக்கு அனுப்பாமல் இழுத்தடிப்பதைக் கண்டித்து, அவரின் தேநீர் விருந்தை தமிழ்நாடு அரசு புறக்கணிக்கிறது. எழுவர் விடுதலை தொடர்பாக ஒன்றிய அரசின் நிலைப்பாடு வேறு மாதிரி இருந்தாலும் அவர்கள் விடுவிக்கப்பட வேண்டும் என்று தமிழக சட்டமன்றத்தில் தொடர் முயற்சிகள் மேற் கொள்ளப்படுகின்றன. அவையெல்லாம் உண்மை யானதா? அல்லது ஒப்புக்கானதா?

ஒன்றிய அரசின் ஓரவஞ்சனைக்கு எதிராகக் குரல் எழுப்பி மக்கள் வாழ்வு சிறக்க வழி செய்வதே மக்கள் நல அரசாக இருக்க முடியும். மாறாக சொத்து வரி உயர்வை மறு பரிசீலனை செய்ய முடியாது, உயர்த்தப்பட்டதை திரும்பப் பெறவோ, குறைக்கவோ கூட முடியாது என்று முதல்வர் ஸ்டாலின் அவர்களே கூறுவது, திமுக ஆட்சி யாருக்கானது? மக்களுக்கானதுதானா? என்கிற கேள்வி எழுகிறது. சொத்து வரியை ரத்து செய்ய வேண்டும் என்று சொல்கிற எதிர்க் கட்சியினரையும் தன் கூட்டணிக் கட்சியி னரையும் பார்த்து, 'மாநில வளர்ச்சியில் அரசியல் செய்யாதீர்கள்' என்கிறார் ஸ்டாலின். புதிதாகத் தேர்வு செய்யப்பட்டுள்ள உள்ளாட்சி அமைப்புகள் கடுமையான நிதி நெருக்கடியில் சிக்கியுள்ளன, அதைச் சரி செய்ய வேண்டும் என்று சொன்னால் சொத்து வரியை உயர்த்துவது தவிர வேறு வழியில்லை, ஏழை மற்றும் நடுத்தர மக்களைப் பாதிக்காமல்தான் சொத்து வரி உயர்த்தப் பட்டுள்ளது என்கிறார் ஸ்டாலின்.

இந்த சொத்து வரி விதிப்பு ஏழை, நடுத்தர மக்களைப் பாதிக்காது என்று எந்த அடிப் படையில் கூறுகிறார் முதல்வர் ஸ்டாலின்? ஒரு கணக்கு சொல்கிறார்கள். தமிழ்நாட்டில் சுமார் 78 லட்சம் வீடுகள் உள்ளனவாம். அவற்றில் 600 சதுர அடி பரப்பளவுக்குள் வரும் வீடுகள், அதாவது 25% வரி உயர்வுக்குள் வரும் வீடுகள் 45.54 லட்சம், 50% வரி உயர்வுக்குள் வரும் வீடுகள் அதாவது 601-1200 சதுர அடிக்குள் வரும் வீடுகள் 19.23 லட்சம். 100% முதல் 150% வரி உயர்வுக்குள் வரும் வீடுகள் அதாவது 1201-1800 மற்றும் 1800 சதுர அடிக்கு மேல் உள்ள வீடுகளின் எண்ணிக்கை வெறும் 7%தான் என்று கணக்கு சொல்கிறார்கள் அரசாங்க அதிகாரிகள்.

தமிழ்நாட்டில் உள்ள 7 கோடி மக்களும் சொந்த வீடுகளில் குடியிருக்கவில்லை. பெரும் பான்மையான ஏழை, நடுத்தர மக்கள் வாடகை வீடுகளில்தான் குடியிருக்கிறார்கள். மேல் நடுத்தர மக்கள்தான் சொந்த வீடுகளில் குடியிருக்கிறார்கள். மட்டுமின்றி பல வீடுகளைக் கட்டிப் போட்டு வாடகைக்கு விட்டுள்ளார்கள். இந்த சொத்து வரி உயர்வால் வாடகை வீட்டில் குடியிருக்கும் பெரும்பான்மையான மக்களுக்கு வாடகை உயர்த்தப்படும். சொத்து வரியின் உயர்வு வாடக்கைக்கு குடியிருப்போரின் தலையில் கட்டப்படும். மாசச் சம்பளக்காரர்கள் பலர் தனக்கு ஒரு வீடு வேண்டும் என்று கடன் பட்டு கட்டிய வீட்டில் குடியிருக்க முடிவதில்லை. வேலை நிமித்தம் வெளியூர்களில் வாடகைக்குத் தான் குடியிருக்கிறார்கள். இவர்கள் தங்கள் தலையில் கட்டப்படும் வரி உயர்வை தான் கட்டியிருக்கும் வீட்டில் குடியிருப்பவர்

தலையில் இரட்டிப்பாக கட்டிவிடுவார்கள்.

இந்த சொத்து வரி உயர்வு ஏதோ குடியிருப்புகளுக்கு மட்டும்தான் என்பதுபோல் பேசுகிறார்கள் ஆட்சியாளர்கள். வணிகப் பயன்பாட்டு கட்டிடங்களுக்கு 100 சதவீதம் வரி உயர்த்தப்பட உள்ளது. ஏற்கனவே மக்கள் கொரோனாவால் பாதிக்கப்பட்டு வருமானம் இன்றி பணம் புழக்கம் இல்லாமல் இருக்கிற நிலையில், வணிகர்கள் பல பேர் வியாபாரம் இல்லாமல் திண்டாடிக் கொண்டிருக்கிறார்கள். அவர்களுக்கு சொத்து வரி உயர்த்தப்பட்டால் அவர்கள் நுகர்வோர் அதாவது பொதுமக்கள் தலையில்தான் அதைக் கட்டுவார்கள். அது மட்டுமல்ல, பெரும்பாலான சிறு வணிகர்கள் வாடகைக் கட்டிடங்களில்தான் தங்கள் வியா பாரத்தை நடத்திக்கொண்டிருக்கிறார்கள். அவர்களுக்கான வாடகையை கட்டிட உரிமை யாளர்கள் உயர்த்திவிடுவார்கள். பாதிக்கப்படப் போது ஏழைகள், அன்றாடங்காய்ச்சிகள், தினக்கூலித் தொழிலாளர்கள், சிறு வணிகர்கள், நடுத்தர மக்கள்தான் இந்த சொத்து வரி உயர்வால் அதிகம் பாதிப்படைவார்கள். வாடகை உயரும், பொருள்களின் விலை உயரும், ஏற்கனவே பெட்ரோல், டீசல், எரி வாயு விலை உயர்வால் டீ, காபி விலையைக்கூட ஏற்றப்போகிறார்கள். சொத்து வரி உயர்வின் காரணமாக கடைகளில் வாடகை அதிகரிக்கும் போது அதையும் கஸ்டமர்கள் தலையிலே கட்டுவார்கள். அது மட்டுமல்ல தண்ணீர் வரியும் அடுத்து இதனால் உயரும் அபாயம் உள்ளது. குடியிருப்பு வீடுகளை மட்டும் கணக்கில் வைத்துக் கொண்டு ஏழை, நடுத்த மக்களைப் பாதிக்காத வரி உயர்வு என்பதெல்லாம் பம்மாத்து வேலையல்லவா?

முதலில் ஒன்றிய அரசின் கட்டாயத்தினால் தான் இந்த சொத்து வரி உயர்வு என்று ஊராட்சிகள் அமைச்சர் நேரு சொன்னார். இப்போது ஊராட்சிகளில் நிதி இல்லை அதனால் வேறு வழியில்லை என்று முதல்வர் சொல்கிறார். ஒன்றிய அரசு நிதி வழங்குவதற்காக சொத்து வரியை உயர்த்தச் சொல்வது மாநில, உள்ளாட்சி அமைப்புகளின் உரிமைகளில் தலையிடும் அடாவடிச் செயல் ஆகும். இதை மாநில சுயாட்சி பேசும் மாநிலத்தை ஆளும் திமுக அரசு கண்டிக்க வேண்டும். அதற்கு எதிராக மற்ற மாநிலங்களை யும் சமூகநீதிக்காக ஒன்றிணைப்பதுபோல் ஒன்று சேர்த்து குரலெழுப்பி எவ்வித நிபந்தனையும் இன்றி ஒன்றிய அரசு மாநிலங்களுக்கு நிதியை வழங்கச் செய்ய வேண்டும். மாநில உரிமை பற்றி பேசிக் கொண்டு உள்ளாட்சி அமைப்பு களின் உரிமையில் மாநில அரசு தலையிடுவது ஏற்றுக்கொள்ள முடியாதது. தமிழ்நாடு நகராட்சிகள் சட்டம் பிரிவு 78ன் படி வரிகளைத் தீர்மானிக்கும் அதிகாரம் அந்த உள்ளாட்சி அமைப்புகளுக்கு மட்டுமே உரியதாகும். அதற்கு மாறாக தமிழ்நாடு நகராட்சி சட்டம் 1920 பிரிவு 81ஏ-ன் கீழ் ஆளுநர் மூலம் சொத்து வரி விகிதம் உயர்த்தி அறிவிக்கப்பட்டுள்ளது. ‘நீட் எதிர்ப்பு’ என்று ஆளுநரின் தேநீர் விருந்தை மறுக்கும் திமுக அரசு, தினக்கூலி தொழிலாளி தேநீர் குடிக்கக் கூட வசதியில்லாத நிலையை உருவாக்கப்போகும் சொத்து வரி உயர்வை, சட்ட விதிகளுக்குப் புறம்பாக அதே ஆளுநர் மூலம் அறிவிப்பதுதான் திராவிட மாதிரி பொருளாதார நடவடிக்கையா?

சமீபத்தில் முதல்வர் ஸ்டாலின் அமேசான் நிறுவனக் கட்டிடத்தினை திறந்து வைத்து பெரு மகிழ்ச்சியடைந்தார். அமேசான் வந்தால் அன்றாடம் சம்பாதிக்கும் சிறுவணிகர்கள் சின்னாபின்னமாகிப் போவார்கள் என்பது சொல்லித் தெரியவேண்டியதில்லை. இப்போது அந்த அமேசான் துவங்கும் முன்னேயே சிறுவணிகர்களை இல்லாமல் செய்வதற்கா இந்தச் சொத்து வரி உயர்வு? வரும் காலத்தில் தொழில் முனைவோர்களை முதல்வர் ஸ்டாலின் அவர்கள் சந்திக்க உள்ளதாகச் செய்திகள் வருகின்றன. நிச்சயமாக அவர்கள் தொழில் துவங்க ஏதுவான சூழலை ஏற்படுத்திக் கொடுக்க புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் போடப்படும். அதில் அவர்களுக்கு சலுகைகள் வழங்கப்படலாம் மாநிலத்தின் வளர்ச்சிக்காக! வாக்களித்த மக்களுக்கு வரி உயர்வு, வந்திறங்கும் முதலாளி களுக்கு வரிச் சலுகை என்றால், இதுதான் திராவிட மாதிரி என்று மக்கள் தப்பாகப் புரிந்து கொள்ள மாட்டார்களா?

திமுக அரசு, அம்பேத்கரின் பிறந்த நாளான ஏப்ரல் 14ஐ சமத்துவ நாளாக அறிவித்திருக்கிறது. ஏற்கனவே பெரியாரின் பிறந்தநாளான செப்டம்பர் 17ஐ சமூகநீதி நாளாக அறிவித்துள்ளது. சமத்துவமும் சமூகநீதியும் அனைவருக்கும் எல்லாருடைய வாழ்க்கையிலும் பாகுபாடின்றி கிடைக்க வேண்டும் என்பது தானே. தமிழ்நாட்டின் மக்கள் தொகையில் பெரும் பான்மையாக உள்ள உழைக்கும் மக்கள் தலையில் மேலும் மேலும் சுமை ஏற்றப்பட்டால் சமத்துவ நாளும் சமூகநீதி நாளும் பொருளற்றுப் போகாதா? சமத்துவ நாள் அறிவிப்பிற்குச் சம்பந்தமே இல்லாமல் சொத்து வரி உயர்த்தி சொந்த மக்களை நோகடிக்கலாமா? சொத்து வரி உயர்வு உடன் ரத்து செய்யப்பட வேண்டும். ❑

# ஈரோடு எஸ்கேஎம் பூர்ணா எண்ணெய் ஆலையில் பீகார் தொழிலாளி மரணம்... காவல்துறை அத்துமீறல்... புலம் பெயர் தொழிலாளர்கள் கைது - உண்மை அறியும் குழுவின் பரிந்துரை

*ஈரோடு மாவட்டம், நஞ்சை ஊத்துக்குளியில் இயங்கி வரும் எஸ்கேஎம் பூர்ணா ஆயில் மில்லில் பீகார் தொழிலாளர் மரணத்தால் ஏற்பட்ட அசம்பாவித சம்பவங்கள், அதனைத் தொடர்ந்து 40 தொழிலாளர்கள் கைது செய்யப்பட்டது தொடர்பாக உண்மை அறிய ஏஐசிசிடியு மாநிலச் செயற்குழு உறுப்பினர் கே.பாலசுப்பிரமணியன், அனைத்திந்திய நீதிக்கான வழக்கறிஞர் சங்க மாநிலக் குழு வழக்கறிஞர் பாரதிமோகன், புரட்சிகர இளைஞர் முன்னணி பாலு, ஏஐசிசிடியு நிர்வாகிகள் வெங்கடேஷ், முத்து, பால்ராஜ் ஆகியோர் கொண்ட குழு அமைக்கப்பட்டு, நஞ்சை ஊத்துக்குளி எஸ்கேஎம் பூர்ணா ஆயில் மில் தொழிலாளர்கள் குடியிருப்பு, ஆலை வளாகம் ஆகியவற்றில் பணியாற்றும் பீகார் தொழிலாளர்கள், ஆலை நிர்வாக அதிகாரி, மொடக்குறிச்சி காவல்துறை அதிகாரிகள், ஈரோடு தொழிற்துறை அதிகாரிகள், பொதுமக்கள், கோவை சிறையில் கைதாகியுள்ள தொழிலாளர்கள் ஆகியோரை நேரில் சந்தித்து ஆய்வுகளை மேற்கொண்டது. உண்மை அறியும் குழு மேற்கொண்ட ஆய்வின் அடிப்படையிலான அறிக்கை அகில இந்திய தொழிற்சங்க மையக் கவுன்சில் மற்றும் அனைத்திந்திய நீதிக்கான வழக்கறிஞர் சங்கம் சார்பாக 13.4.2022 அன்று ஈரோடு மாவட்ட வருவாய் அலுவலர் திருமதி சந்தோசினி சந்திரா அவர்களிடம் வழங்கப் பட்டது. இதில் ஏஐசிசிடியு மாநிலத் தலைவர் சங்கரபாண்டியன் கலந்து கொண்டார்.*

**அறிக்கையில் முன்வைக்கப்பட்ட மாவட்ட நிர்வாகத்திற்கான பரிந்துரைகள்:**

- *எஸ்கேம் நிறுவன ஆலைகளில் பணிக்கு தொழிலாளர்கள் வந்து போகும் நேரங்களில் அதாவது ஒரு ஷிப்ட் முடிந்து ஆட்கள் மாறும் நேரங்களில் கனரக வாகனங்களை இயக்க அனுமதிக்கக் கூடாது அல்லது மாற்றுப் பாதை அமைப்பதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும்.*
- *பணியாற்றும் தொழிலாளர்களுக்கு குறைந்த பட்ச சம்பளத்தை அமல்படுத்த நடவடிக்கைகள் எடுக்க வேண்டும்.*
- *மாதாந்திர சம்பளத்தை நிர்வாகமே நேரடியாக சம்பந்தப்பட்ட தொழிலாளர்களின் வங்கிக் கணக்கில் வரவு வைக்க வேண்டியதை உத்தரவாதப்படுத்த வேண்டும்.*
- *புலம்பெயர்ந்த தொழிலாளர்கள் (வேலை வாய்ப்பு மற்றும் சேவை நிபந்தனைகளை ஒழுங்குபடுத்துதல்) சட்டம், 1979ஐ கறாராக அமல்படுத்தப்படுவதை உத்தரவாதப்படுத்த வேண்டும்.*
- *தொழிலாளர்களின் குடியிருப்புகளுக்கு அடிப்படை தேவைகளை செய்து கொடுத்து முறையாக பராமரிக்கப்படுவதை உறுதிப்படுத்த வேண்டும்.*
- *தொழிலாளர்களுக்கான இஎஸ்ஐ (ESI) அடையாள அட்டைகள் அவர் அவர்களிடம் ஒப்படைக்கப்பட வேண்டும்.*
- *புதிதாக தொழிலாளர்களை பணிக்கு நியமிக்கும்போது இடைத்தரகர்களை இல்லாமல் நிர்வாகமே நேரடியாக தேர்வுசெய்து நியமித்துக்கொள்ள வேண்டும்.*
- *தொழிலார் நலன் சார்ந்த சட்டங்களை அமல்படுத்தாத தொழிற்சாலைகள் மீது குற்றவியல் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.*

இந்தப் பிரச்சினை தொடர்பாக இகக(மாலெ)விடுதலையின் பீகார் சட்டமன்றக்குழுத் தலைவர் மெகபூப் ஆலம், உடனடியான நடவடிக்கைகள் மேற்கொள்ள வலியுறுத்தி பீகார் முதலமைச்சர் நிதிஷ்குமாரிடம் தொலைபேசியில் தொடர்பு கொண்டு பேசியது மட்டுமின்றி, கடிதமும் கொடுத்துள்ளார். அதன் பின்னணியிலும், உண்மை அறியும் குழு எடுத்த முயற்சியினாலும் மரணமடைந்த தொழிலாளியின் குடும்பத்தினரை விமானத்தில் வரவழைத்து நிர்வாகம் ரூ.5 லட்சம் முதற்கட்டமாக வழங்கியுள்ளது. மேலும் இழப்பீட்டுத் தொகை ரூ.8.5 லட்சத்தையும் வாங்கித் தருவதாக உறுதியளித்துள்ளது. நிர்வாகம் இப்போது எடுத்த நடவடிக்கையை தொழிலாளி இறந்தவுடன் எழுத்துபூர்வமாக மேற்கொண்டிருந்தால் அசம்பாவிதங்கள் தவிர்க்கப்பட்டிருக்கும்.

### தமிழக அரசுக்கு வேண்டுகோள்

- தமிழ்நாடு தொழில் உற்பத்தியில், சேவை துறைகளில் புலம்பெயர் தொழிலாளர்கள் பங்களிப்பு கணிசமாக இருக்கிறது. சுமார் 15 இலட்சம் புலம்பெயர் தொழிலாளர்கள் பணியாற்றி வருகின்றனர். அவர்களது உழைப்பு தமிழ்நாட்டு நிறுவனங்களுக்கு அவசியமான தாகும் என தொழிலதிபர்களும் பல்வேறு சமயங்களில் கருத்து தெரிவித்துள்ளனர்.
- எஸ்கேஎம் ஆலையில் நடைபெற்ற அசம்பா விதங்களுக்கு ஆலை நிர்வாகமும் நிலை மையை நெளிவு சுளிவாகக் கையாளாமல் பலப் பிரயோகம் செய்த மொடக்குறிச்சி காவல் துறையினரும் பொறுப்பாகும். ஆனால், தொழிலாளர்களை மட்டுமே குற்றவாளியாக்கி 40 தொழிலாளர்களை கொலை முயற்சி வழக்கு உள்ளிட்ட பிரிவுகளில் வழக்குப் புனைந்து சிறையில் அடைத்திருப்பது நியாயமானது அல்ல. எனவே, அவர்கள் மீதான வழக்குகளை திரும்பிப் பெற்று அவர்களை விடுதலை செய்ய உரிய சட்ட நடவடிக்கைகள் எடுக்க வேண்டும். விபத்தில் பலியான பீகார் தொழிலாளி குடும்பத்திற்கு ரூபாய் 50 லட்சம் இழப்பீடு வழங்கிட வேண்டுகிறோம்.
- தொழிற்சாலை ஆய்வாளர்கள் மற்றும் தொழிலாளர் நல அலுவலர்கள் சரியான முறையில் தொழிற்சாலை ஆய்வுகளை மேற்கொண்டு தொழிலாளர் சட்டங்களை அமலாக்க வேண்டும் என்றும் தவறு செய்கிற நிர்வாகம் மீது கிரிமினல் குற்ற நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் கோருகிறோம்.
- எஸ்கேஎம் ஆலை நிர்வாக அதிகாரிக்கு கடுமையான தண்டனை வழங்கப்பட வேண்டும். பணியிலிருந்து உடனடியாக நீக்கப்பட வேண்டும்.
- தம்மோடு பணியாற்றிய தொழிலாளி இறப்பால் உணர்ச்சிவசப்பட்டத் தொழிலாளர்களை சமாதானப் படுத்த முயற்சிக்காமல் நிர்வாகத் தூண்டுதலின் பேரில் போலீஸ் தடியடி நடத்தியது சட்டத்திற்குப் புறம்பானது.நடந்த சம்பவத்துக்கு காவல்துறையின் பொறுப்பற்ற தன்மையும் முதிர்ச்சியின்மையும்தான் காரண மாகும். சம்பவத்திற்கு காரணமான காவல் துறையினர் மீது துறைவாரி நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். குறைந்தபட்சம் பணியிட மாற்றம் செய்யப் பட வேண்டும்.
- எஸ்கேஎம் ஆலையில் நடைபெற்ற புலம் பெயர்ந்த தொழிலாளர் மரணம் குறித்தும் அதை ஒட்டி நடைபெற்ற சம்பவம் குறித்தும் உயர்நீதிமன்ற நீதிபதி தலைமையில் விசாரணை நடத்தி அறிக்கை வெளியிட வேண்டும் எனக் கோருகிறோம்.
- தமிழ்நாட்டில் உள்ள புலம்பெயர்ந்த தொழிலாளர்கள் உட்பட அனைத்து தொழிலாளர்களின் பணியிட பாதுகாப்பையும் உத்தரவாதம் செய்திட வேண்டுகிறோம்.
- குறுகிய அரசியல் நோக்கம் கொண்ட சில அமைப்புகள், இதை தொழிலாளர்கள் பிரச்சினையாக பார்க்காமல், "இந்திக்கார தொழிலாளர்கள் வெளியேற்றப்பட வேண்டும்" என்ற இனவெறுப்பு அரசியலில் ஈடுபடுகின்றனர். அவர்கள் மீது நடவடிக்கை எடுக்க வேண்டும்.

**–கோவை பாலு**



**குழுவின் ஆய்வறிக்கையை** ஈரோடு மாவட்ட வருவாய் அலுவலர் **மற்றும் கூடுதல் மாவட்ட நீதிபதி** திருமதி. சி. சந்தோசினி சந்திரா **அவர்களிடம் குழு உறுப்பினர்கள் மற்றும் சமூக செயல்பாட்டாளர்கள் 13-04-2022 காலை வழங்கி, விளக்கமளித்தனர்**

# பெட்ரோல், டீசல், எரி வாயு விலை உயர்வு கண்டித்து நாடு தழுவிய இயக்கம்

*5 மாநில தேர்தல்களை தொடர்ந்து, ஒன்றிய அரசாங்கம் டீசல், பெட்ரோல் விலைகளை அடுத்தடுத்து 12வது முறையாக உயர்த்தியிருக்கிறது. பெருந்தொற்று, பொதுமுடக்கம் காரணமாக வேலை இல்லாத் திண்டாட்டம் இதுவரை இல்லாத அளவுக்கு உயர்ந்திருக்கிறது. எரிபொருள் விலைகள் செங்குத்தாக உயர்ந்துள்ளதால் உணவுப்பொருள் உள்ளிட்ட அத்தியாவசியப் பொருட்களின் விலைகள் மேலும் உயர்ந்து, அதன் காரணமாக வேலையில்லாதோரும் ஏழைகளும் இன்னும் பெரிய துன்பத்துக்கு ஆளாக்கப்படுவது நடக்கும். எனவே, எரிபொருள் விலைகளை குறைக்க வேண்டுமெனக் கோரி ஏப்ரல் 7 முதல் 13 வரை பரப்புரை இயக்கம் ஒன்றை நடத்துமாறு இகக(மாலெ) அழைப்பு விடுத்தது. தமிழகத்தில் பல்வேறு இடங்களில் பரப்புரையும் ஆர்ப்பாட்டங்களும் நடைபெற்றன. சென்னை வள்ளுவர் கோட்டத்தில் பல ஆண்டுகளுக்குப் பின்னர் இகக(மாலெ) சார்பாக ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.*



மணப்பாறை




சென்னை



குமரி




தர்மபுரி



கடையநல்லூர்



சேலம்



கடலூர்




புதுச்சேரி




ஆண்டிப்பட்டி



கள்ளக்குறிச்சி



நாமக்கல்

MALAE THEEPORI. Registered with Registrar of NewsPaper for India TN/TAM/2002/12013
Posted on 20.4.2022 at Egmore RMS/1 Patrika Channel Regn No:TN/CCN/368/2021-2023
Published on 1st and 16th of every month R.DIS: 2804/17 Licensed to Post WPP TN/PMG/(CCR)/WPP-436/2021-2023

# அம்பேத்காரின் பெயராலே உறுதியேற்போம்!













Owned and Published bys; S.Balasundaram from 1/10, 11th street, Karunanidhi Nagar, Ayanavaram, Chennai - 600023
Printed by R.Murugan at Print Point, 10, Pulipone Bazar 2nd Lane, Triplicane, Chennai - 600005. Editor G.Ramesh